விலை சதம் 50 ★ பக்கங்கள்— 8

'அண்ணா கோப்பி'
வாடிக்கையாளர்களுக்கு
ஓர் நற்செய்தி!
நாலுவித கணித வாய்ப்பாடுப்
புத்தகம் ஒன்றினை இலவசமாகப்
பெற்றுக் கொள்ள
½ அண்ணா மிக்ஸ் கோப்பி 5,
½ சோயா றின் 5, ½ அண்ணா மிளகாய்ப்
பொடி 25, ½ அண்ணா பத்திகள்
15 வெற்றுப்பைக்கட்டுகளை அனுப்
பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா தொழிலகம்
இணுவில் தொலைபேசி: 7412
கிளை; 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
இல: 1, மத்திய சந்தை, சுன்னாகம்.

# ஈழநாடு வார மலர்

THE EELANAADU VAARAMALAR

'சிக்கனமே சிறந்த செல்வம்'
சிக்கன சலவைக்கு
மில்க்வைற் பார் சோப்
வாங்கி உபயோகியுங்கள்.
பெரிய பார் சோப்பாகவும்,
சிறிய பார் சோப்பாகவும்
விற்பனையாகிக்கொண்டிருக்
கின்றது. மேலுறைகளை சேக
ரித்து அனுப்பி சிறந்த பரிசு
களைப் பெற்றுக்கொள்ளுங்
கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

மலர் 20 சித்திரை 17 ஜூலை 21 ஞாயிற்றுக்கிழமை [30—4—78] இதழ் 78

# துப்பறியும் பொலிஸ் படுகொலை: 'பேஜோ - 404' கார்

# யானைக்காட்டில் கண்டுபிடிப்பு!

## வானொலிக் கருவியும் உருக்குலைந்த நிலையில் மீட்பு!

(கொழும்பு)

**முருங்கனில் கொலையுண்ட சி.ஐ.டி. பொலிசார் பாவித்த 'பேஜோ-404' கார் அடர்ந்த காட்டுக்குள் முற்றாக எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.**

முருங்கனிலிருந்து 80 மைல் தொலைவில் வவுனியாவுக்கு வடக்கே முறிகண்டிக்கு அண்மையில் 152-வது மைலுக்கு அருகே ஜேட்டியிலிருந்து சுமார் முக்கால் மைல் தொலைவிலேயே இக்கார் கண்டுபிடிக்கப்பட்டது.

காரிலிருந்த நவீன வானொலிக் கருவியும் முற்றாகச் சேதமுற்ற நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தீவிர தேடுதல் வேட்டை நடத்திய யாழ்-வவுனியா-அனுராதபுரம் பொலிசாரும், இராணுவத்தினரும் நேற்று முன்தினம் ஆனைக்காடு என்ற பகுதியில் இக்காரைக் கண்டுபிடித்துள்ளனர்.

கார் முற்றாக எரிந்த நிலையில் கூடாரமும் சில இரும்புபாகங்களும் அங்கு காணப்படுகின்றனவாம்.

அதிசக்திவாய்ந்த நவீன வானொலிக்கருவியும் உருக்குலைந்து இயக்கமுடியாத நிலையில் காணப்பட்டதாம்.

### விசேட பொலிஸ் பிரிவு

இக்கார் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து உயர்பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட பொலிஸ் கோஷ்டி ஒன்று அங்கு விரைந்துள்ளது.

கைரேகைநிபுணர்கள், சட்ட நிபுணர்கள், இரசாயன நிபுணர்கள் ஆகியோரும் அங்கு

(8-ம் பக்கம் பார்க்க)

---

வவுனியா சிங்களப் பிரிவு அ. அ. ஏ.

## கொழும்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுவார்

### இளம் பெண் சிறிவதி, புவனேந்திரன் இரகசியமாக சாட்சியம்

(அனுராதபுரம்)

வவுனியா சிங்களப்பிரிவு உதவி அரசாங்க அதிபரை கொழும்பில் குறுக்கு விசாரணை செய்ய விரும்புவதாக சன்சோனிக் கமிஷன் வெள்ளியன்று சட்டத்தரணி பாரிலட் கூறினார்

[illegible] ரால் கற்பழிக்கப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்ட சிறிவதி (16 வயது) என்ற இளம் பெண் கவுண் அணிந்து தந்தையுடன் வந்திருந்தார்.

வவுனியா பு. எ. ன். பீ. அமைப்பாளர் புலேந்திரனும் வந்திருந்தார்.

சாட்சி யொருவர் ரகசியமாக சாட்சியமளிக்க விரும்புவதாக அரச சட்டத்தரணி தென்னக்கோன் கூறியபோது 1 மணிக்கு அதனை ஆரம்பிக்[illegible] பெற்ற சாட்சிகளை அழை[illegible] மாறு கமிஷனர் தெரிவித்தார்.

இங்கு வந்துள்ள எல்லா சாட்சிகளும் இரகசியமாக சாட்சியமளிக்க விரும்புவதாக சட்டத்தரணி தென்னக்கோன் கூறினார். எல்லா

(8ம் பக்கம் பார்க்க)

---

## வெளி மாவட்ட மே தின ஊர்வலத்துக்கு அனுமதி

(கொழும்பு)

வெளிமாவட்டங்களிலும் மே தின ஊர்வலங்களை நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச்சந்தித்ததை அடுத்து ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருடனும் மற்றும் உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்திய பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தில் தமிழ் தொழிலாளர்களுக்கும் ஹட்டனில் இ. தொ. காவுக்கும் மேதின ஊர்வலத்தை நடத்த அனுமதிப்பது என்று முதலில் தீர்மானிக்கப்பட்டது

நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற பொலிஸ் உயர் அதிகாரிகள் மகாநாட்டிலேயே ஏனைய கட்சி ஊர்வலங்களுக்கும் அனுமதிப்பதென தீர்மானிக்க பட்டது. (ஈ இ)

---

## திவாகர்— ஜே-ஆர் சந்திப்பு

(கொழும்பு)

தந்தை செல்வா நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்த காந்தி அறநிலைய தலைவர் டாக்டர் ஆர் ஆர். திவாகர் நேற்றுக்காலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்து உரையாடினார்.

டாக்டர் திவாகர் திரு. ஜே. ஆருடனேயே நேற்றுக் காலை உணவை அருந்தினார்.

இன்று காலை டாக்டர் திவாகர் கொழும்பிலிருந்து இந்தியா பயணமானார் (ஈ இ)

---

# தமிழ் தொழிலாளர் மே தின விழா

## ஊர்வலத்துடன் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி, செந்தமிழர் இயக்கம், மொழி வழித் தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்தும் மேதின விழா, நாளை மாலை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் தமிழர் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறுகின்றது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் ஆகியன முதல்தடவையாக இந்த மே தினவிழாவில் கலந்துகொள்கின்றன.

மேதினத்தை யொட்டிய ஊர்வலம் நல்லூர் முத்திரைச் சந்தையில் பி.ப. 3-00 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, ஸ்ரான்லிவீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலைய வீதி, ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டுவீதி, வேம்படி வீதிவழியாக மைதானத்தை அடையும். ஊர்வலத்தில் திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் வி. பொன்னம்பலம், மொழி வழித் தொழிற்சங்கப்பிரமுகர்கள், மாணவத் தலைவர்கள் இளைஞர் பேரவை, மகளிர் பேரவை, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.

ஊர்வலம் துவிச்சக்கரவண்டி அணி, வாத்திகள் அணி, உழவு இயந்திர அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிற்சங்க அணி, செந்தமிழர் இயக்க

(8ம் பக்கம் பார்க்க)

### தொழிற்சங்க கூட்டுச்சபை

(வண்ணார்பண்ணை)

ஐக்கிய மேதின விழாவை யொட்டிய ஊர்வலம் திட்டமிட்டபடி யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலிருந்து பிற்பகல் 3. 30 மணிக்கு ஆரம்பமாகும். என்று யாழ். மாவட்ட தொழிற்சங்கங்களின் கூட்டுச் சபை அறிவித்துள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

---

### பல்கனி இடிந்து 27 பேர் பலி!

புதுடில்லி, ஏப். 29

ஆந்திரப் பிரதேசத்தில் விடொன்றின் பல்கனி இடிந்து விழுந்ததில் 13 பெண்கள் உட்பட 27 பேர் பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற நாடகம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தபோது பல்கனி இடிந்து விழுந்ததாகவும் 22 பேர் ஸ்தலத்தில் மாண்டனர் என்றும் 5 பேர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. 50 பேர் படுகாயமுற்றனர். (இ)

---

# தங்கத்தின் விலை

## வெகுவாகக் குறையலாம்

(கொழும்பு)

தங்கத்தை ஏலத்தில் விற்பனைசெய்வதென இந்திய அரசு எடுத்துள்ள முடிவின் காரணமாக இலங்கையிலும் தங்கத்தின் விலை வெகுவாகக் குறையக்கூடும் என்று வர்த்தக வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய அரசு தன் கையிருப்பில் இருக்கும் தங்கத்தைகாலத்துக்குக் காலம் ஏலத்தில் விற்பனை செய்வதென்று முடிவு செய்துள்ளது இதனால் இந்தியாவுக்குள் தங்கம் கடத்திவருவது தவிர்க்கப்படுவதுடன் விலையும் குறையலாமென்று கருதப்படுகின்றது.

இதேசமயம் பிரிட்டனிலும் தங்கத்தின் விலை இறங்கியிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

உள்ளூரில் இப்பொழுது சவரின் ரூபா 800 வரை விற்பனையாகின்றது அடுத்தவாரமளவில் சவரின் விலை 50 ரூபா வீதம் குறையலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## விற்பனைக்கு

B. S. A. - 360 c. c. - B 31 model BN இலக்கத் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

**தனபாலசிங்கம்**
நில அளவையாளர்,
19. முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
9167

## வேலைவாய்ப்புவழிகாட்டும் ஸ்தாபனம்

தொழில் பெறுவதற்கு உதவி வேண்டுவோரும், வேலைவாய்ப்புக்காக தொழில் திறமை பயிற்சி தேவைப் படுவோரும் கீழ்க்கண்ட விலாசத்திடமிருந்து அதற் கான பத்திரங்களைப் பெறும்படி கேட்கப்படுகிறார்கள்.

**வேலைவாய்ப்பு வழிகாட்டும் ஸ்தாபனம்**
இல. 127, பிரதான வீதி — யாழ்ப்பாணம்
8375

## Cashier/Short Hand Typist

அனுபவமுள்ள சுருக்கெழுத்துத் தட்டெழுத்துக் காசாளர் ஒருவர் (இளைஞர்) தேவை. பிணை ரூ. 5000/- வங்கி வட்டி தரப்படும். தகுதிக்கேற்ற சம்பளம். கல்வித்தகைமை, அனுபவம் உட்பட நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் மாத்திரம் அனுப்புக.

**ஆட்சி இயக்குனர்**
மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட்
144, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்
9187

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை சிவக்கொழுந்து

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த முருகுப் பிள்ளை சிவக்கொழுந்து காலமாகிவிட்டார்.

இவர் பிரபல சோதிடர் மார்க்கண்டுவின் அன்புத் துணைவரும் பகவதியின் அன்பு மாமியாரும், தனராஜ் (வலினை வைத்தீஸ்வர வித்தியாலயம்), இதயராஜ், ஜெயராஜ், விஜயராஜ், ஜெயமலர் அவர்களின் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-4-78) ஞாயிறு காலை பத்து மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மு. மார்க்கண்டு
[சோதிடர்]
30/12, சீனிவாசகம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம். 9185

## தேவை

**பதவி:** பிரதான எழுதுநர்/ செயலாளர் தரம்— I

**தகைமைகள் :** கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி; அல்லது பொது எழுதுநர் தரத்திலுள்ள தரம் II பதவியில் ஐந்து வருடகால அனுபவம்.

**சம்பளம்:** ரூபா 300—400; 10X10, 15X6 விசேட கொடுப்பனவு தனி

**வயது:** 22-5-78 ல் 25க்குக் குறையாமலும் 40 க்கு கூடாமலும்,

**பிணை:** உரொக்கம் ரூபா 1000/-; ஆதனம் ரூபா 3000/-

**விண்ணப்ப முடிவு தேதி:** 15-5-78.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர், வட மாகாணம் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
25, மூன் வீதி, யாழ்ப்பாணம்.
9174

## சுழிபுரம் கிராமசபை கேள்வி அறிவித்தல்

சுழிபுரம் கிராமசபை விசேட ஆணையாளரால் கீழ்க் காட்டப்பட்டிருக்கும் வேலைகளுக்கான கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

1. காட்டுப்புலம் வீதி அமைத்தல்.
2. பொதுஜன நூல் நிலையம் அமைத்தல்.

கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50-00ம், கேள்விப் பிணைப்பணம் ரூபா 250-00.

மேற்படி கிரயங்களைக்கட்டி கேள்விப் பத்திரங்களை 9-05-1978ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் பூரணப்படுத்தப்பட்டு 10-05-1978-ம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலமாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரப்பிரதி யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் 10-05-78ம் திகதி கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும்.

வேலைகள் பற்றிய மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. ஞானபாஸ்கரன்
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
சுழிபுரம்.
26-04-78. 9160

## கேள்வி விளம்பரம்

மல்லாகம் கிராமசபை நிர்வாகஸ்தரால் கீழ் குறிப்பிடும் வேலைக்கு 5-5-78 ந் திகதி முற்பகல் 10-00 (பத்து) மணி வரை முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலை விபரம்

1. தெரிட்டி ஒழுங்கைக்கு கல்லிட்டு தார் ஊற்றுதல்.

கேள்விப்பத்திரப் பணம் ரூ. 10/-ம், கேள்விப் பிணைப் பணம் ரூபா 50/-ம் இவ்வலுவலகத்தில் 4-5-78 ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை செலுத்தி உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலகநேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. மகாதேவா,
நிர்வாகஸ்தர்,
கிராமசபை,
மல்லாகம்.

கிராமாட்சி மன்ற
அலுவலகம்,
மல்லாகம்,
28-4-78. 9192

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டுள்ளது)

### வெயின்ற் (தீந்தைகள்) விற்பனைக்கான கேள்விப் பத்திரம்

எமது சங்கத்தில் பலவகையான பெயின்றுகள் (தீந்தைகள்) விற்பனைக்குண்டு. மேற்படி பெயின்ற் வகைகளை கீழ்க் காணும் விலாசத்தில் பார்வையிட்டு, கொள்வனவிற்கான உங்கள் கேள்விப்பத்திரத்தை 16-5-78-ம் திகதிக்குமுன்பாக எமக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்பிவைக்கவும். கேள்விப் பத்திரம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் 'பெயின்ற் கொள்வனவுக்கான கேள்விப் பத்திரம்' என எழுதப்படல்வேண்டும்.

**பொது முகாமையாளர்**
பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்.

பருத்தித்துறை
பல.நோ. கூ. சங்கம்,
பிரதானவீதி,
பருத்தித்துறை.
9144

# வரி விளம்பரம்

## தேவை

நெசவு வேலைக்கு அனுபவமுள்ள பெண்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதியுண்டு. பேபி கைத்தறி நிலையம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 9173

அச்சுக்கூடத்தில் வேலைகள் பழக விரும்பும் 15 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் தேவை ஆர். எம். அச்சகம்.149, கே. கே. எஸ் வீதி.யாழ்ப்பாணம் 9183

பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் ஜனதா ஸ்பெஷல் பீடி சுற்றுவதில் அனுபவம் உள்ள பெண் தொழிலாளர் தேவை. கூலி 1000 பீடிக்கு ரூபா 7-50. மேலும் ஜனதா ஸ்பெஷல் பீடிதயாரிக்க பெண் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும். ஜனதாஸ்பெஷல்பீடி சுற்றவிரும்புவோரும் பீடி சுற்றப்பழகவிரும்புவோரும் உடன் விண்ணப்பிக்கவும்; அல்லது நேரில்வரவும். மகான்ஸ் பீடித் தொழிற்சாலை, சந்திரபவனம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 9135

எமது ஸ்தாபனத்தின் வடமராகான நிர்வாகத்திற்கு பொறுப்பாளர் தேவை. இளைஞராகவும், முதலீடு செய்யக் கூடியவராகவும் இருத்தல் நன்று. காலையில் நேரில் வரவும். ரி. எம். சேவகர், 72, காரைநகர் வீதி, (நாவாந்துறை) யாழ்ப்பாணம். 9158

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும் வேலை பழகுபவர்களும் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவி கிளாஸ் அன் மெத்தல் வேர்க்ஸ், நீர்வேலி. 8994

யாழ் நகரில் பிரசித்தி பெற்ற புடவை வியாபார நிறுவனத்திற்கு புடவை, அழகு சாதனங்கள் விற்பனை செய்வதற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. விரும்புவோர் 5-05-78 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9194, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9194

## விற்பனைக்கு

இரு அவுட்டர் மோட்டர்கள் விற்பனைக்குண்டு. ஒன்று 6 கோஸ்பவர், மற்றது 10 கோஸ்பவர். தொடர்பு: ஆ. ஆனந்தி, கென்னடி வீதி, திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம். 9176

## விளம்பரம்

### வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனையாகவிருக்கின்றன. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 5-5-78 வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கேள்விப்பத்திர வைப்புப்பணம் ரூபா 500/ ஆகும்.

இங்ஙனம்
**பொது முகாமையாளர்**
அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம்
9181

## விற்பனைக்கு

"வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் தொகையாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்புகொள்ளவும்: ராதா ஓயில் மில்ஸ், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

டியூனர் அம்பிளிபயர் (Pioneear Mono & Stereo), Sony ஸ்பீக்கர் 40 W. 4Way Akai M.10 ரேப்ரெக்கோடர், Akai1710 ரேப்ரெக்கோடர். பிளவ்ஸ், ஐந்து சந்தி. 100. யாழ்ப்பாணம். 9186

## கல்வி

தனிப்பட்ட முறையாகவோ அல்லது வீடுகள் சென்று ஆங்கில இலக்கணம், இலக்கியம் (Emma Mc Beth) பேச்சு Spoken English கற்றுக் கொடுக்கப்படும். விளம்பர இல. 8920 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 8920

G.C.E. (O/L) 1978 மார்கழி, G.C.E. (A/L) 1979-80 கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புகள் 3-5-78ல் ஆரம்பமாகவுள்ளன. 1979ம் ஆண்டு G. S. Q. பரீட்சைக்கு உயிரியல், பௌதிகம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞான பாடங்களுக்குரிய செயன்முறைப் பயிற்சிகள் வித்தியாலயத்தினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. விபரத்திற்கு அதிபர், உயர்கல்விக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியோடு தொடர்பு கொள்க. 9149

## பயிற்சி

ஒரு வருட விவசாயப் பயிற்சி- இளைஞர்கட்கு 3 மாத விவசாயப் பயிற்சி- இருபாலாருக்கும் 16—22 வயதுடையோருக்கு. ஊதியம் / வேதனம் அடிப்படையில். நற்சாட்சிப் பத்திரங்களுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ். கல்லூரி விவசாய நிறுவனம், மருதனமடம், சுன்னாகம், 9165

## I. C. M. A.

Foundation - Section A
Financial Accounting FAI
May 75 to Nov. 77 &
Pilot paper
Seven Question papers
and suggested answers
by
A. Somasundarampillai
B. A. F. C. A.
Rs. 25/-
Chartered Accountant
91½ (95) Stanley Road,
Jaffna.
Percival Hall,
Jaffna.
9172


## Percival Hall

Chapel Street, Jaffna.

I.C.M.A. Foundation A
Applications Close 8-5-78
Enrolment on 12-5-78
Classes Commence 15-5-78

I C.M.A. Foundation B Professional I
Applications 31-5-78
Entrolment on 2-6-78
Classes Commence 5-6-78

9171




# நான் ஒரு குடை வாங்கினேன்!

கலைவாதி கலீல்

நெடு நாட்களுக்குப் பின், நான் அந்தக் குடையை வாங்கியிருந்தேன். இரவலல்ல! பணம் கொடுத்துத்தான். 'நாச்சிமுத்து அன் கம்பனியில்'தான். சுளையாக இருபத்திரண்டு ரூபா ஐம்பது சதம் கொடுத்து வாங்கினேன்! அது கூட பலத்த ஆராய்ச்சியின் பின்னர் எடுக்கப்பட்ட தீர்க்கமான முடிவின் அடிப்படையில்தான் வாங்கப்பட்டிருந்தது. மழை 'சோ!' வென்று பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தது. இனிக் குடையின்றி வெளியே தலைகாட்ட முடியாது என்ற நிலையேற்பட்ட பின்புதான் இருபத்திரண்டு ரூபா ஐம்பது சதம் கொடுத்து அந்தக் குடையை வாங்கினேன்!

இருபத்திரண்டு ரூபா ஐம்பது சதம் என்பது என்னைப் பொறுத்த அளவில் ஒரு பெரிய 'எமவுண்ட்'தான்! நான் வாங்கும் சம்பளம் வீட்டின் அன்றாடச் செலவுக்கே போதாமல், இருக்கும்போது இறு இறு கடன்களுக்கு ஆட்பட்டு அதனைத் திருப்பிச் செலுத்துவதற்காக ஒவ்வொரு மாத 'பட்ஜட்'டிலும் 'இறு இறு' வெட்டுக்கள் போட்டு ஒருவாறு காலத்தைக் கழிக்கும் எனக்கு இது ஒரு பெரிய 'எமவுண்ட்'தான்.

நான் குடையைப் பற்றி அவ்வளவு கவலைப்படுவதில்லை. பேய் மழை பொழிந்தால் வீட்டில் பதுங்கிவிடுவேன். 'பிசு பிசு'வென்று தூறிக்கொண்டிருந்தால் வெளியே கிளம்பிவிடுவேன் நனைந்துகொண்டுதான். ஆனால் என் உடம்புக்கொன்றும் வந்துவிடாது. அப்படி ஒரு சரீரம்... ஆனால் என் குழந்தைகள் வெளியே, பாடசாலைக்கோ, அல்லது பக்கத்திலுள்ள பெட்டிக்கடைக்கோ செல்லும்போது நனைந்துகொண்டு திரிவார்களே என்றுதான் இந்த இருபத்திரண்டு ரூபா ஐம்பது சதத்தைப்பற்றி நான் கவலைப்படவில்லை!

ஏன்... 'வளவள'வென்று... மனக்குமைச்சலை வெளிப்படுத்திக்கொண்டு... எப்படியோ ஒரு குடையை வாங்கிவிட்டேன்! இனிமேல் என்னுடைய மாபெரும் 'டியூட்டி' அந்தக் குடையை (என் குடையை) எப்படியாவது கொஞ்சக்காலத்திற்குக் கட்டிக் காப்பாற்ற வேண்டியதுதான்!

'குடையை, ஏன் 'அம்ரல்லா' என்று சொல்லுகிறார்களென்றால் எங்காவது அதை வைத்தால் மீண்டும் 'அம்பிட்ற'தில்லை அதனால்தான்! இது அடிக்கடி விட்டுக்கொள்கின்ற விழல் பகடி? இதைக் கேட்டுக் கேட்டு எல்லோருக்கும் புளித்துப்போய்விட்டது. என் மனைவி கூட நான், 'குடையை ஏன் அம்ரல்லா...' என்று ஆரம்பித்துவிட்டேனென்றால், 'போதுமே! இதைவிட்டால் வேறு ஜோக்கே கிடையாதோ' என்று சலித்துக்கொள்வாள். அந்த நேரத்தில் உண்மையிலேயே வேறு 'ஜோக்கு'கள் 'அம்பிட்'டிருந்ததில்லைதான்! அந்தப் பழைய சம்பவங்களெல்லாம் இப்போது என் மனத்திரையின் முன் '70 எம். எம்- டெரட்-ஏ. ஓ. காட்சியாக விரிந்தன. காரணம் என் கையில் இருந்த குடைதான்; சுற்றியிருக்கும் கடதாசியைப் பிய்த்து எறியாமல் குடையின் 'ஹேண்டிலைக்' கையில் பிடித்துக்கொண்டு 'நாச்சிமுத்து அன் கம்பனி'யை விட்டு வெளியேறினேன் நான்! அப்போது மழைவிட்டிருந்தது! இரண்டு எட்டுக்கூட வைத்திருக்கமாட்டேன். பழக்கமான குரல் ஒன்றின் கிண்டல் மொழி எனக்குப் பின்னால் இருந்து எழவே வெடுக்கென்று திரும்பிப் பார்த்தேன்.

"ஏன் மாஸ்டர்... கையிலே கணக்கக் காக வச்சிருக்காப்பிலே இருக்கே! புதுக்கொடையெல்லாம் போவுதே!' உதட்டைச் சுண்டி ஒரு ஓரத்திற்கு இழுத்து அந்த ஓரத்திலிருந்து பிடியைக் கையின் இரு விரல்களுக்கு 'டிரான்ஸ்பர்' செய்தவாறு கேட்டான் அந்த ஆந்தை விழி ஆசாமி! அவனுக்கு நான் ஒரு பத்து ரூபாய் கடன் கொடுக்கவேண்டும்! எப்போதோ வாங்கினது. அதை அவன் இப்படித்தான் ஞாபகப்படுத்துவான்! அது அவனது வழக்கம்.

'சரீ! இந்தக்காலத்திலே இப்படிப் பத்து அஞ்சுன்னு சின்னச் சின்னக் கடன்லாம் குடுக்கக்கூடாது சார்' கொடுத்தா ஐநூறு, ஆயிரம் என்று பெரிய தொகையாகக் கொடுத்துடனும்' இப்படி அந்த ஆசாமி அடிக்கடி சொல்லும்போது எனக்கும் அடிக்கடி முகம் கறுக்கும். என்ன நைஸாக் குத்துகிறான் எழுத்தாளன் மாதிரி! இன்று என்ன சொல்லப்போகிறானோ.

'மழை ரொம்ப மோஷமாயிருக்கு சார்! புள்ளகுட்டிகள்ளாம் நனைஞ்சுக்கிட்டுத் திரியுது... அதனால்தான் ரொம்பக் கஷ்டப்பட்டு...' அசடு வழிய என்னுடைய கண்ணறுவிவை அவனிடம் சொல்லுகிறேன், அத்தோடு விடுகிறேனா 'உங்களுக்கு ஒரு சின்ன 'எமவுண்ட்' தரேனுமில்லா... இன்னும் இரண்டு மூணு நாளிலே...'

இந்த 'இரண்டு மூணு நாள்' என்பது என் வாயிலிருந்து அடிக்கடி புறப்படும் வார்த்தைதான் அது ஒரு 'ஹெபிட்' ஆகப்போய்விட்டது. நாடகத்தில் இயங்குவதுபோல் இந்த வார்த்தையை நான் பிரயோகிக்கையில் எதிர்ப் பார்த்திரதாரியும் ஒரு புன்னகையை வெளியிடுவார். அந்த நேரத்தில் என் உள்ளம் படும் பாட்டை... நாக்கைப் பிடுங்கிக் கொண்டு...

'எப்படியோ — நீங்களே பாத்து எவ்வளவு சுறுக்காகத் தரமுடியுமோ அவ்வளவு சுறுக்காகத் தந்தாச் சரிதான்...' சொல்லிவிட்டு விரைகிறான். எனக்குச் 'சுறுக்'கென்றது அந்த ஆளிடமிருந்து ஒருவாறு தப்பி பஸ் நிலையத்தை அடைகிறேன். திடீரென பிரளக்கணம் வைத்துக்கொண்டு மழை பொழிந்து தள்ளுகிறது. குடையைச் சுற்றியிருக்கும் கடதாசியையும் கிழிக்காமல் குடையையும் விரிக்காமல் வேகமாக நடந்து 'ரெஸ்டிங்ஷெட்'டுக்குள் தஞ்சமாகிறேன். அதற்குள் உடம்பின் பெரும்பகுதி 'சொட்டுச் சொட்டாய்' நனைந்துவிட்டது! ஷெட்டில் நின்றவர்களும் வெளியே நின்றவர்களும் என்னையும் குடையையும் ஒரு மாதிரிப் பார்க்கிறார்கள். அதைப்பற்றி நான் அதிகம் கவலைப்படவில்லை;

'புத்தம் புதுக்குடை. காசு குடுத்து வாங்கினது இருபத்திரண்டு ரூபா ஐம்பது சதம் இந்தா பிடி!' என்று கடதாசியை உரிக்காமல் 'ஃபிரஷ்'ஷாகக் கொண்டுபோய் மனைவியிடம் நீட்டவேண்டும் என்ற அற்ப ஆசை திடீரென்று ஏற்பட்டதால்தான் நான் குடையை விரிக்க விரும்பவில்லை. நான் குடையா வாங்கியிருக்கிறேன். ஒரு 'ஸ்கூட்டர்' வாங்கின பூரிப்பு எனக்கு! அந்தக் கிளர்ச்சியை மனைவியுடன் பகிர்ந்துகொள்ள வேண்டாமா? மற்றவர்களைப் பற்றி எனக்கென்ன கவலை! என் மனைவியைப் பற்றித்தான் எனக்குக் கவலை! அவள் மனது கொஞ்சம் 'டல்'லாக இருந்தால் அன்று நான் பட்டினி தானே!

ஆனால் அந்த நாசமாய்ப் போன மழைதான் விட்டபாடாய்த் தெரியவில்லை. நான் நின்றிருந்த 'ஷெட்' வேறு ஒழுக ஆரம்பித்தது. எனக்கு தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது. 'ஷெட்'டிற்குள் நின்ற சிலர் தங்கள். தங்களது குடைகளை விரித்துப்பிடிக்க ஆரம்பித்தார்கள். நான் மட்டும்...

எனக்குத் தெரிந்த நண்பன் ராமஸ்வாமி அரைகுறையாக நனைந்தபடி 'ஷெட்'டை நோக்கி வேகமாக விரைந்து வந்தான். அவனைப் பார்த்ததுமே எனக்குப் 'பகீ'ரென்றது. அவனுக்கும் நான் கடன்காரன்தான். அவனுக்கு ஒரு பதினைந்து ரூபாய் கொடுக்கவேண்டும். ஒரு முறை மிக அவசரத் தேவையென்று ஒரு ஐம்பது ரூபாய் கேட்டிருந்தேன். மூன்று, நாலு நாட்கள் இழுத்தடித்துவிட்டு ஒரு இருபத்தைந்து ரூபாய் தந்தான். அதில் ஒரு பத்து ரூபாய் அந்த 'இரண்டொரு' நாட்களில் கொடுத்துவிட்டேன் இன்னும் 15 ரூபா கொடுக்கவேண்டும் அதையும் 'இரண்டொரு' நாளில் கொடுத்துவிடத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அதற்குள் நான் நின்ற 'ஷெட்'டுக்குள் பாய்கிறானே! என்ன பண்ணித் தொலைப்பானோ...

சீச்சீ! இருக்காது. மழைக்கு ஒதுங்குகிறான் போலும் அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்? ஷெட்டுக்குள் நுழைந்து கொண்டே 'அடடே! நீயா? என்ன இதற்குள்ளே' என்று கேட்டவாறே எனக்கு முன்னால் வந்து நின்றான் ராமஸ்வாமி. அடிவயிற்றை என்னவோ செய்தது எனக்கு! 'மழைக்கு ஒதுங்கினேம்பா' என்று சமாளித்துவிட்டு, மேலும் சமாளிப்பதற்காக 'நீ எங்கப்பா இந்தப் பக்கம்' என்று வேறு கேட்டு வைத்தேன். கடன் தந்த பணத்தைக் கேட்டுவிடக் கூடாதே என்று ஆண்டவனிடம் பிரார்த்தனை வேறு. ஆனால் அவன் என்னிடம் கடன் காசைக் கேட்டவன் போல் தோன்றவில்லை! ஏதோ 'குஷி'யில் இருப்பவன் போல் காட்சியளித்தான் அவனுடைய 'குஷி'யைப் பார்த்ததும் எனக்கும் 'குஷி' பிறந்துவிடும் போல் இருந்தது. அதெல்லாம் மரியாதை இல்லை. அந்த இடத்தில் என்பது போல் சும்மா நின்றேன்.

'வாப்பா ரோயல் ரெஸ்டோரண்டில் போய் ஒரு டீ அடிப்போம்' ராமஸ்வாமி ரொம்ப மகிழ்ச்சியாக அழைத்தான். நான் அதைவிட மகிழ்ச்சியாக, செல்வதற்குத் தயாராக இருந்தாலும் சுய மரியாதை என்ற ஒன்று தடுத்தது. தடுத்ததோடு 'ஜஸ்ட் ஐ ஹேட், தேங்ஸ்' என்று பொய் ஒன்றும் சொல்ல வைத்தது. அவன் விடுவதாயில்லை? குடிச்சால் என்ன? இன்றென்று அடிப்பமே!' என்று கஷ்டப்படுத்தத் தொடங்கினான் மழையும் விட்டிருந்தது இருவரும் ரோயலை அடைந்தோம்' குடையை விரித்துப் பயன்படுத்தாமலேயே; சர்வர் கொண்டு வைத்துச் சென்ற 'ஸோட் 'ஈட்ஸி'ல் ஒன்றை, எடுத்துக் கடித்தபோதுதான் என் கடைசி வாண்டு' வாப்பா எனக்கு மஸ்கோத் வாங்கிக் கித்து வாங்கோ' என்று மழலையில் வேண்டிக்கொண்டது ஞாபகம் வந்தது. 'ஸோட்-ஈட்ஸ்' தொண்டைக்குள் இறங்க மறுத்தது. அதுமட்டுமல்ல பெரிய பையன் 'நோட்ஸ்' கொப்பிக்குச் சொல்லிருந்ததும் மகள் ஒரு யார் வெள்ளை 'பப்ளி'னுக்குச் சொன்னதும் கூட ஞாபகம் வந்தது. கையில் தம்படிகாசில்லை. எல்லாம் குடையோடு சரி!

'இந்தப் பணத்தைப் பயனுள்ள வழியில்தானே செலவழித்திருக்கிறேன் குடையைக் கொண்டுபோய் வீட்டில் காட்டி, வீட்டிலுள்ளவர்களை மகிழ்ச்சிக்கடலில் திணற அடித்து மஸ்கட், நோட்ஸ்புக், பப்ளின் வகையறாக்களை மறக்கச் செய்துவிடலாம் என்று இதயத்திற்குச் சமாதானம் சொல்லிக்கொண்டு 'டீ'யை உறுஞ்சினேன். மீண்டும் மழை ஒப்பாரி வைத்துக்கொண்டு அழத்தொடங்கியது. இன்று வெளியேறினாற் போலத்தான்!

இனியென்ன? 'ஹை, ராமஸ்வாமி, என்று ஆரம்பித்து அரை மணித்தியாலம் அரற்றித்தள்ளினோம் கௌண்டரில் இருந்த 'காஷியர்' எங்களையும் மழையையும் மாறி மாறி முறைத்துப் பார்த்தபடி இருந்தார் அவரது முறைப்புக்கெல்லாம் நாங்கள் மசிந்து கொடுக்காவிட்டாலும் மழை என்னவோ மசிந்துகொடுக்கத்தான் செய்தது. 'போசு போசு'வென்று பிசுபிசுத்த மழை ஒரேயடியாக ஓய்ந்து வெயில் வேறு 'சுரீர்' என்று அடிக்க ஆரம்பித்துவிட்டது.

அவசரம் அவசரமாக இருவரும் வெளியேறினோம் அவன்தான் பில்லுக்குப் பணம் கொடுத்தான். வீட்டை நெருங்கிக்கொண்டிருக்கிறேன். ஏதோ ஓர் உள்ளுணர்வு என்னை விழிப்படைய வைத்தது. வெறுங்கையுடன் நடந்து வருவது போன்ற பிரமை! இரு கைகளையும் பார்க்கிறேன் மின்சாரக் கம்பியில் கைவைத்தது போன்ற 'ஷொக்' பிடரியில் ஒரு பலமான தட்டு.

'குடை எங்கே?'

உடல் அறுந்து விழுந்தது போன்ற உணர்வு! பாதி ஓட்டமும் பாதி நடையுமாக ஹோட்டலை அடைகிறேன். நான் அமர்ந்திருந்த மேசையருகே என் கண்கள் அசுர வேகத்தில் பாய்கின்றன. அங்கே! அங்கே!

என் குடையிருந்தால் தானே!

ஸிலின்கோ ஹவுஸ் பதினைந்தாம் மாடியிலிருந்து உருட்டிவிட்டது போன்ற பிரமை.

'கஸ்யர், என் குடையைப் பார்த்தீர்களா'

'இல்லையே?' அவரது பதிலில் எவ்வளவோ, எவ்வளவோ அர்த்தங்கள். அவற்றுள்

[7-ம் பக்கம் பார்க்க]

## படம் பார்க்கச் சொன்னார் நீதிபதி!

பிரிந்து வாழ நேர்ந்து பின் நீதிமன்றத்தில் பராமரிப்பு வழக்கின் நிமித்தம் சந்தித்துக் கொண்ட தம்பதிகளை புதிதாக வெளிவந்திருக்கும் இந்திப் படத்தைப் பார்த்துவிட்டு வரும்படி நீதிபதி யோசனை கூறினாராம். படத்தைப் பார்த்த அத்தம்பதியர் இப்போது மீண்டும் சேர்ந்து வாழ்கிறார்கள். குடும்பம் மகிழ்ச்சியாக நடக்கிறதாம்.

'டைம்ஸ் ஆஃப் இந்தியா' என்ற பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இலக்கியம் - நாடகம்- சினிமா யாவும் மனிதனுக்குப் பயன்படுபவையாக இருக்க வேண்டும். பணமே நோக்கமென்றால் நற்பயனை எங்கே எதிர்பார்க்க முடியும்? அற்ப உணர்வுகளைத் தூண்டிவிட்டு இளைஞர்களைச் சீரழிக்கும் படங்கள் வெறும் பண ஆசைபிடித்தவர்களின் நாச வேலை என்றுதான் சொல்ல வேண்டும்.

நல்ல கருத்துக்களை நல்ல முறையில் சொன்னால் சமுதாயம் ஏற்றுத் திருந்தும் என்பதற்கு மேற்படி சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு.

# இசைக் கச்சேரியொன்று நடைபெறுகிறது

கால் நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கையிலும் இசை விழாக்கள் நடைபெற்று வருகின்றன தென்னாட்டில் நடைபெற்றுவரும் இசை விழாக்களுக்கும் இங்கு நடைபெற்று வரும் இசை விழாக்களுக்கும் நோக்கங்களின் அடிப்படையிலும், இரசிக மகாசனங்களின் தாரதம்மியங்களிலும் உண்மையிலேயே வேறுபாடுகள் இருக்கவே இருக்கின்றன. நானும் ஒரு இசைக்கலைஞனாக மட்டுமில்லாமல் ரசிகனாகவும் பல காலம் இருந்து வருகிறேன். ஆகவே மேலே குறிப்பிட்டுள்ள வேறுபாடுகளை விபரிக்கின் இப்போ எழுத எடுத்துக்கொண்ட நோக்கமும் நிறைவேறாமல் போய்விடும்.

இரசிகர்கள் என்று மேலோட்டமாகக் கருதப்படுகின்றவர்களில் பெரும்பான்மையோரின் நிலை, உண்மையில் வேடிக்கைக்குரியது, அதே சமயம் அவர்கள் பரிதாபத்துக்கும் உரியவர்களாகின்றார்கள். பொழுது போக்காக வருகின்றவர்கள், சூழ்நிலையை ரசிக்கவும் கண்டுகளிக்கவும் வருகின்றவர்கள், கச்சேரி செய்கிறவர்களின் வேண்டுதலுக்காக வருகின்றவர்கள்; கட்சி கட்டிக்கொண்டு வருகின்றவர்கள், நாலு பேர் போகின்றார்களே நாமும் போவோம் என்று வருகின்றவர்கள், இன்னாருக்குக் கௌரவமளிக்கக் கூடாது என்று பொறுமை கொண்டு வராது விடுகின்றவர்கள் என்று இப்படியாக அமைகின்றவர்களே அதிகம். கலையை இனங்கண்டு, பலதரப்பட்ட திறமைகளையுணர்ந்து ஏற்பதை ஏற்றுத் தவிர்ப்பவற்றைத் தவிர்த்து தாமும் அனுபவித்து, கலை உலகையும் கலைஞர்களையும் தூக்கிவிட நினைப்பவர்கள் இங்கு அரிதினும் அரிதாகவே காணப்படுகின்றனர், இவர்களையும் இரசிகர்களாக எண்ணுவதும் ஏற்றுக்கொள்ளுவதும் எவ்வளவு பொருத்தமற்ற செயல்?

கலைஞர்கள் தமக்கு அளிக்கப்பட்ட ஒருசில நிமிட நேரத்தில் தம் ஆற்றலை வெளிக்கொணர்ந்து காழ்த் திருப்பிடைய முயற்சித்து உண்மையான இரசிகர்களையும் திருப்திப்படுத்த ஆர்வம் கொண்டுள்ள வேளையில் சிறுவர்கள் தொல்லை ஒருபுறம் நிகழும் வீட்டுக்கதை, சொந்தக்கதை பற்றிப் பேசிக் கொள்பவர்களும் முன்னாலேதான் இருப்

(7ம் பக்கம் பார்க்க)

# ஜயந்தி

அ. செ. மு.

போய் மறைந்த ஆண்டு ஐப்பசித்திங்கள் வெள்ளிக்கிழமை கடைசி வெள்ளி. குருவழிபாட்டுக்கு உகந்த தினங்களில் ஒன்றாக வெள்ளிக்கிழமையும் கணிப்புப்பெற்றது. என்றாலும், ஐப்பசிக் கடைசி வெள்ளி அதிலே ஒரு தனி மகத்துவம் ஏற்றுநிகழ்வது. ஐப்பசியில்தானே கந்தசஷ்டி! அதுவும்கூட, சென்ற ஆண்டு ஐப்பசிக் கடைசிவெள்ளியையும் நடுவே ஒருநாள் தன்னோடு சேர்த்துக்கொண்டு வந்த வெள்ளிக்கிழமைக்கு மேலும் சிறப்பு ஏற்றிவைத்தது. சூரன் கிளைவேரோடு மாண்டதையும் மாவலி சக்கராதிபத்தியம் மண்ணோடு சாய்ந்ததையும் மாந்தர்க்கு நினைவுறுத்தி இறையருள் போற்றும் புனிதமாதம். கார்மேகம் வானில் திரண்டு எங்கும் பூம்பந்தர் கவிந்து புனல் பெய்ய, ஊரெங்கும் கல்யாணமேளம் மங்கள இசை பொழியும்.

சென்ற ஆண்டு ஐப்பசியில் சில தினங்களாக இராப்போது விடாமழை. பொழுது விடிய இருளோடு இருளாய் கார்மேகம் ஒடுக்கலைந்து நீலவானம் வளங்கமற்று பனிச்சிடும். கதிரவனின் வெப்பக்கதிர் சுளீர் எனப் பாய்ந்து வாட்டும். மரம் செடிகொடிகளெல்லாம் நீராடிப் புனிதமெய்தி லிர்த்து மகிழ்ந்து நிற்குமாப்போல் இராக்காலம் பெய்த மழையில் மண்புழுதி, செருப்புழுதி ஆலைப்புகைப் புழுதி எல்லாம் கழுவிப்போகிப் புதுப்பசுமை துளிர்த்து மினுமினுத்துக் கொழிக்க, மெல்ல அசைந்தாடி ஐப்பசி வெள்ளி கந்தசஷ்டி விரத நாட்களில் கீரிமலையில் தீர்த்தமாடிவிட்டு அங்கிருந்து ஆசாரபவித்திரமாக சுவாமிதரிசனம் செய்ய நேரே கோவிலுக்கு ஏகும் அடியார்களை இனிதாக நம்மகத்தே நினைவூட்டும்.

தென்னிலங்கை சூழ்ந்த இன எழுச்சிக் கலவரத்தீயின் வெம்மை ஆற்றாது பெரும் அவலப்பட்டு சென்ற ஆண்டு ஐப்பசியில் வடபகுதிக்குப் புகல் தேடி ஓடி வந்தவர்களில் அடியேனும் ஒருவன். இந்தத்தவ பூமி - காங்கேசன் கோவில் கடவை, என் ஜன்மபூமி, இங்கொருபால் ஆல்கொண்டு வளர்ந்த ஆர்ப்பாடியாய் நெடுநாள் நிமிர்ந்து கிடந்த குன்றம் பொடிந்து அதன் கல்லும் மண்ணும் இன்றைக்கெல்லாம் ஆயிரம் பதினாயிரம் பேருக்குச் சோறுபோடுகிறது என்று வேறோர்சமயம் அதை எண்ணி எமக்குள்ளாய் பெருமைப்பட்டதுக்கு என்றும் பட்டினத்தடிகள் பாடியதுபோல் மெய்யாக விருந்ததெல்லாம் நாளாக நாளாகப் பொய்யாய் கனவாய் பழங்கதையாய் மெல்ல மறைந்ததுவே எனும்படியாய் அந்தப் பூர்வாசிரம உரிமை பாத்யதை அதையிட்ட பெருமிதமான நினைவு-அது எல்லாமே என்றென்றே எந்நாளோ எப்பெப்பவோ எந்த அளவில் காலச்சக்கரம் அப்படிச் சுழன்று திரிசக்கரம் சகடசக்கரமாக உருண்டு புரண்டு கரணமடித்து நிற்கிறது. இருப்பினும், தொன்று நிகழ்ந்ததனைத்தும் எந்தாய் மொழியாம் இவ்வண்ணத் தமிழ் அதிசயமாக உணர்ந்திருப்பதுபோல் அல்லவா இப்போ கதை நடந்திருக்கு! அதனை முன்வைத்து துதித்து பழமையைத் தியானித்த போது பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தாய் போல் நினைவுகள் கனவுகள் தெடுவழிச்சுவடுகள் மந்திர உச்சாடனம் பெற்று அருவித் தாரையாகக் கொட்டத் தொடங்கிவிடுவதை என்னவோ ஒளித்து மறைப்பதற்கில்லை.

உடைமை இழந்து, பொருள் இழந்து பெரும் அல்லல் தொலைப்பட்டு உயிரைக் கையில் பற்றிக்கொண்டு வடக்கு நோக்கி ஓடிவந்த ஆயிரமாயிரம் அகதிகள் கூட்டத்தில் ஒருவனாக ரயில் விட்டிறங்கி என்னைப் பெற்ற பூமித்தாயின் மடிமீது வீழ்வது போல நேரே இவ்வூர் கோவில் மடமொன்றில் போய் தங்கினேன். ஆண்டுதோறும் ஐப்பசிக் கந்தசஷ்டி காத்திருந்து ஆறு தினங்களும் விரதம் அனுட்டிப்பது நெடுநாள் வழமையாகிப்போயிருந்ததால், கூட வந்த நண்பர்களுடமே என் வீட்டுக்காரருக்குச் செய்தி சொல்லி அனுப்பிவிட்டேன். அவர்கள் என் பழையநாள் பள்ளித்தோழர்கள். சுற்றயல் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். அத்துடன் தென்னிலங்கையிலும் கூட சரிநிகர் சமானமாக நமக்கு ஒரே நிலைதரமான பீடமும் பேறும் ஏற்றமும் அருளி நம்மை ஒன்றாகப் பிணைத்த இராசசேவகம்... அரச ஊழியம்! ஐப்பசிக் கடைசி வெள்ளியன்று கோவிலுக்கு வருவதாகவும் என்னைச் சந்திப்பதாகவும் நிச்சய வாக்களித்து ரயில் நிலையத்தில் பிரிந்துசென்றார்கள். தெய்வ சந்நிதியில் குடிகொள்ளும் அந்தமாதிரி, ஒரு தனிமையில் தான் என் அப்போதைய மனச்சஞ்சலம் சிறிதளவேனும் சாந்திபெறும் என எண்ணியதால் நான் கோவில் கோட்டம் நாடினேன். ஐப்பசிக் கடைசி வெள்ளியையும் என் நண்பர்கள் வரவையும் ஆவலோடு காத்திருந்தேன்.

தென்னிலங்கை புகுந்த இராமதூதனின் வாலில் மூட்டிய தீ இலங்காபுரியைச் சுட்டெரித்ததாம். அதே பழைய கதையே இன்னும் தொடருமோ? ஈராறு செவிகளிலே நின் நல்லடியின் தீனக்குரல் எள்ளளவும் கேட்கவில்லையோ ஆறுமுகத்தரசே - என்றெல்லாம் மனம் நொந்து முருகப்பெருமான் சந்நிதி ஏகி இதையிட்டு காலைமாலை வழிபட்டுக்கொண்டிருந்த நாட்களில் ஒருதினம்-

சிமெந்து ஆலை பார்க்கச் சென்றேன். பூமியில் அகழ்ந்தெடுத்த கல்லை அவித்துப் பொடிபண்ணிப் பக்குவசூர்ணமாக்கிப் பொட்டணம் கட்டிக் குவிக்கும் இயந்திரசாதனகூடம் முழுக்கப் பார்வையிட்டபின் அங்கு ஆலைப்புகைபோக்கியுடனே இணைந்தாற்போல வெட்டவெளியில் அமைக்கப் பெற்றிருந்த ஏணியில் ஏறினேன். எத்தனை நூறுபடிகளோ, நம்மைச் சுவர்க்கத்துக்கே கொண்டுசேர்க்குமோ எனப் பிரமிக்கும்படியாய் விண்வெளி நோக்கி மிக உயர்க எழுந்து நின்றது அவ்வேணி. ஒவ்வொரு படியாக அதில் கால் வைத்து மேலே தாவினேன். மேலே போகப் போகச் சற்று வட்டமாக இந்நிலப் பகுதியில் வெகுதூரம் தெரிந்தது. காடும் கலடும் கட்டாந்தரையுமாகச் சிறுபராயம் முதலாய் பழகிப்போன நிலப் பரப்பு, அதல பாதாளமாக பள்ளம் விழுந்து பாரிய பள்ளத்தாக்கினை நிகர்த்து என் காலடியில் இது சமயம் பயங்கரமாகத் தோற்றுகிறது. அதே சமயம், சமநோக்கில் சுற்றுவட்டமாக என் ஜன்மபூமி முன்னைப் பொழுதும் பார்க்கக் கிடைத்திருக்காததொரு உயர் நிலை உச்சநிலைக் காட்சியாக - கண்கொள்ளாக் காட்சியாக அதில் இன்புற்றுத் திளைக்கவும் வசீகரித்து நிகழும்.

(தொடரும்)

# சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் நூற்றாண்டு விழா

கி. வைரமுத்து

பாரதியார் என்றால் சுப்பிரமணிய பாரதியார்போல சைவப்பெரியாரென்றால் சிவபாதசுந்தரனாரே! இது சைவந்தழுவும் நல்லுலகம் கண்ட உண்மை. பத்திரிகையில் கண்ட நூற்றாண்டுவிழாபற்றிய தகவல் பெரியார் வாழ்க்கையிற் கண்ட, கேள்வியுற்ற நிகழ்ச்சிகள் சிலவற்றை எனது மனத்திரையில் ஓடச்செய்தது. என்ன இன்ப உணர்வு; திரைப்படங்கள் பலகாலம் பார்க்காத எனக்கு பத்திரிகை செய்த நன்மைகளில் இதுவுமொன்று. மனத்திரையில் ஓடிய புனிதமான, புரட்சிகரமான காட்சிகளை குறிப்பிடாதிருக்கமுடியாது.

வெள்ளிக்கிழமை. தானத்துக்கமைந்த குமிழிமிதிதடியின் மெதுவான ஓசை ஆம்; அவர்தான் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார். சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிலிருந்து மூளாய்ப்பிள்ளையார் கோவிலுக்குச் சென்றுகொண்டிருக்கின்றார். தோய்த்துலர்ந்த செங்கரை துலங்கும் வாழை நார்ப்பட்டுவேட்டி. காற்றில் மடமடத்து அலையோடு அதற்கிணைந்தபட்டுச்சால்வை, பின்னுக்கு ஆடி அசையும் இடையிடை வெண்ணிலையோடிய மென் குடுமி முடிச்சு, அவர்தம் மெலிவிய உடலுக்கு பொலிவை ஊட்டுகின்றன. சிவனடியார் வருகின்றனர். அடியார்க்கு அடியாராகி மக்கள் ஒதுங்கி, வழிவிட்டு வணங்கி நிற்கின்றனர், ஏன் வீதியருகில் அமைந்த வீடுகளிலும் அமைதி. மனவொடுக்கம், சாந்தி. இறைவன்பால் மற்றவரையும் எண்ணவைக்கும் வாரத்தில் ஒரு புனிதநிகழ்ச்சி. இறையருளால் கிடைக்கும் பேரின்பம் தனக்கு மட்டுமல்ல உரியது. "தான்பெற்ற இன்பம் வையகமும் பெறவே." என்றெண்ணும் சைவப்பெரியார் எல்லோரும் இறைவனைச் சிந்திக்க, அருள்பெற, வாழ்ந்து காட்டுகின்ற-வருகின்ற திருவருட்காந்தமல்லவா? இது மனத்திரையில் சமயவாழ்வைக் காட்டும் ஒரு துணிக்கை.

அன்றும் வெள்ளிக்கிழமை. கல்லூரி இறைவணக்கத்துடன் முறையாக ஆரம்பமாகிறது. ஆசிரியர் வழமைபோல் கடமையில் ஈடுபடுகின்றனர். கல்வி அதிகாரி ஒருவர் கல்லூரி தொடங்கும் நேரம் பார்த்து வருகின்றார். கல்லூரி முறையாக இயங்கிக்கொண்டிருக்கின்றது. ஆனால் அதிபர் சிவபாதசுந்தரனார் கல்லூரியிற் காணப்படவில்லை. மற்று கல்லூரிகளில் கிடைக்கும் வழமையான - அதிகாரதோரணைக்குரிய அடிமை ஆண்டானுக்களிக்கும் வரவேற்பை எதிர்பார்த்த அதிகாரிக்கு ஏமாற்றம். குற்றங் காணத்துடிக்கிறது மனம். அதிபர் மூளாய்ப் பிள்ளையார் ஆலயத்துக்கு வழமையாகச்செய்யும் இறை வணக்கத்துக்குச் சென்றுவிட்டார் என்பதை அதிகாரி அறிகின்றார். இன்றல்ல ஒவ்வொரு வெள்ளியும்.... அதிகாரி நேரசூசிகையைப் பார்வையிடுகின்றார். முதற்பாடத்திற்குரிய நேரத்தில் அதிபருக்கு பாடமோ மேற்பார்வையோ குறிக்கப்படவில்லை. எனினும் அதிகாரி—

கல்லூரி நுழைவாயிலில் அதிகாரியின் வரவு பெரியாருக்கு அறிவிக்கப்பட்டது. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று வாழ்ந்த ஞானபரம்பரையைச் சார்ந்து வாழ்ந்தவர் சைவப்பெரியார். அவர் எவ்வித பதட்டமுமின்றி தாம் வதியுமறை சென்று, மூன்று மிளகுடன் பாலைக்கொதிக்க வைத்து, அதைப் பருகித் தனது நேரத்துக்கு அலுவலகம் செல்கின்றார். மன்னிப்பைக் கோருவர் என்றெண்ணுகின்றனர் அதிகாரி. உள்ளொளி வழியும் முகப் பொலிவையும் சைவக்கோலத்தையும் கண்ட அதிகாரிக்கு 'நல்லாரைக்காண்பதுவும் நன்றே' என்றஎண்ணம் மலர்கிறது. மற்றவை யெல்லாம் மறைகிறது. மேற்பார்வை செய்யவோ, ஆலோசனை கூறவோ அதிகாரிக்கு என்ன சிறப்புண்டு? குசலம் விசாரித்து அதிகாரி திரும்புகின்றனர். இதை என்திரைப்படநாடாவில் அவரின்கல்லூரி சம்பந்தமான ஒரு நறுக்கு.

## சமுதாயப் புரட்சி

அடுத்தது சமுதாயப் புரட்சியிலொன்று. பேரறிஞர் ஹண்டி பேரின்பநாயகம் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் உள்நாட்டில் சர்வசன விடுதலைக்கும் வாலிப காங்கிரசை உத்வேகத்துடன் முடுக்கிய காலம். திருநெல்வேலியில் வாலிப காங்கிரசின் மாபெருங் கூட்டம். புரட்சிக்கனலைக் கக்கும் காங்கிரசுக்கு உரமான எதிர்ப்பு இல்லாமற்போகுமா? சமாசனம், சமபோசனம், சமசந்தர்ப்பம் இவற்றிற்கு இடமில்லை என்று முரண்பட்டனர் பலர். கூட்டத்தைக் குழப்ப நேரடித் தாக்குதல்களுக்கு ஆயத்தங்கள் உருவாகின்றன. பொதுமக்கள் அக்காலத்தில் சாற்சட்டைக்காரருக்குத் தான் பயமும் மரியாதையும். கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்த மேடைக்கு ஒருவர் ஏறுகின்றனர். சைவப் பெரியார் இந்தச் சமூகச்சீர்திருத்தத்தை ஆதரித்து தலைமை தாங்குவதினால் புதுக் கருத்தில் உண்மையுண்டென்பதை பலர் உணருகின்றனர். சைவப் பெரியாரின் தலைமை நேரடித்தாக்குதலை தவிர்த்ததென்றே சொல்ல வேண்டும். எல்லோரும் இறைவனின் பிள்ளைகளென்பதையும் ஒடுக்கப்பட்டோருக்கு சமசந்தர்ப்பமும் விடுதலையும் அளிக்க வேண்டுமென்பதையும், அன்னாரின் விஷயங்களை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டுமென்பதையும் ஆணித்தரமாக விளக்குகின்றார் நேர்நின்று எதிர்க்க முடியாது கண்டு சிலர் ஒளிந்து நின்று கல்லெறிகின்றனர். "அஞ்சுவதொன்றுமில்லையென மெலிந்த உடலில் மூண்டெழுந்த நெஞ்சுரத்துடன் அசையாது கூட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். முடிந்ததும் திருப்தியுடனும் மலர்ச்சியுடனும் வெளியேறுகின்றனர்.

இவை சைவப் பெரியாரின் வரலாற்றிற் சில. பொதுவாக மனித சமுதாயத்துக்கும் சிறப்பாக இக்கட்டில்மாட்டித்துடிக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் சைவப்பெரியாரைப் போன்ற வழிகாட்டிகள் இன்று அவசியமாகின்றனர். அவர்களில்லையெனில் அப்பெரியாரின் வாழ்க்கை வரலாற்றையும் கொள்கைகளையும் ஆராய்வதும் உணர்வதும் அத்தியாவசியமாகின்றன. அவர் ஆங்கிலத்தில் யாத்த 'இந்து சமயத்தில் சைவம்' என்னும் அரிய நூல் மேனாட்டார் சைவப் பேருண்மைகளை அறியவும் தமிழ்ப் பெருங்குடிகளை அறியவும் வாய்ப்பளித்த அருமருந்து. மனித உரிமை பேணும்வள்ளலாய்-அறியாமை அகற்றும் சற்குருவாய், அஞ்ஞான இருள் நீக்கும் ஆசாரியராய் - சமாதானம் நிலைக்கும் சமுதாயச் சிற்பியாய் வாழ்ந்து சர்வதேசப் பொதுச்சொத்தாய் மலர்ந்த சைவப்பெரியாருக்கு நூற்றாண்டு விழா இப்பொழுது எடுப்பது சாலவும் அவசியம். இவ்விழாவினூடு நாம் அளப்பரிய நன்மைகளை அடைவோம்.

## ஒழுக்கம்

பல்லவி

ஒழுக்கத்தினால் உயர்வு காண்போம்
உண்மையை மறக்காது நன்மையே நிதம்—செய்து

அநுபல்லவி

இழுக்கினை தமிழுக்கூட்டி இடர்ப்படாதிருக்க
இனியசுக வாழ்வு என்றென்றும் நிலைத்திருக்க—
ஒழுக்க...

சரணங்கள்

மதுவெறியினை ஒழித்து மனுநீதி தவறாது
எதுநீதி! எதுதர்மம் என்பதைநாம் உணர்ந்து
நித நிதம் இறைவனை நினைவிலே நிறுத்தி
முதன்மை யுற்றுலகத்தில் முக்தி நிலைபெற- ஒழுக்க...

உயிரினும் மேலாக ஒழுக்கத்தினை மதித்து;
பயிருக்கு வித்திட்டு பயனடைதல்போல;
உயர்வினை நாம்நாடி உலகப் புகழ் பெற்று;
அயரா துழைத்து அநீதியை அழித்து — ஒழுக்க...

ஒழுக்கச் சீர்கேடு உலகுக் கிடும்பைதரும்
இழுக்கினை நிசமூட்டி இல்வாழ்வினைச் சிதைக்கும்
அழுக்கா றவாவெகுளி அனியாயத்தை விலக்கி;
வழுவாது நல்லற வழியினிலே நின்று — ஒழுக்க...

பழிபாவம் பகை தடுத்து பண்பாளராகிச்சீர்
அழிவினைத் தடைசெய்து அன்பினால் உயிர்வாழ
தெளிவான இதயத்தில் சிந்தனை விரிவாக்கி
களிகூர்ந்து எப்போதும் கடவுளைத் துதிசெய்து —
ஒழுக்க...

— திமிலைக்கண்ணன்

# நவீன இந்திய இலக்கிய கர்த்தாக்களுக்கு நம்மவர் சளைத்தவர்களல்ல!

நவீன இந்திய இலக்கிய கர்த்தாக்களுக்கு நம்மவர் எவ்விதத்திலும் சளைத்தவர்களாய் இல்லை" என்று யாழ். பல்கலைக் கழக வளாக இராமநாதன் மண்டபத்தில் "நவீன இலக்கிய கர்த்தாக்கள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. சோ. சிவபாதசுந்தரம் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கிற்கு யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் திரு.சு. வித்தியானந்தன் தலைமைதாங்கினார். திரு. சிவபாதசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நான் 1932-ம் ஆண்டில் முதல் முறையாக மறுப்புக் கட்டுரை ஒன்றை எழுதினேன். ஞானப்பிரகாசரின் தமிழ் விளக்கத்திற்கு மறுப்புக் கட்டுரை எழுதினேன். இவ்வாறு நான் துணிவுடன் எழுதுவதற்கு பழைய இலக்கியங்களையும், தற்கால இலக்கியங்களையும் கற்ற எனக்கு தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தான் கைகொடுத்தது. பின்னர் இந்திய எழுத்தாளர் கல்கியுடன் கொண்ட தொடர்பினாலும் அடிக்கடி இந்தியாவிற்கு யாத்திரை சென்று நூல்களைப்படங்களைச் சேகரித்த பல எழுத்தாளர்களையும் சந்தித்தேன். இதனால் இந்திய எழுத்தாளர்கள்பற்றி 1938 ம் 39 ம் ஆண்டுகளில் ஈழகேசரியில் தமிழ் கட்டுரைகள் எழுதி இந்திய எழுத்தாளர்களின் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

என்னுடைய கட்டுரைகளை திரு. கு. ப. ராஜகோபாலன், புதுமைப்பித்தன் போன்றவர்கள் பாராட்டினார்கள்? இந்திய எழுத்தாளர்களில் சிலர் படித்தபின் எழுதுகிறார்கள். சிலர் எதையும் படிக்காமல் எழுதுகிறார்கள். நான் ஈழகேசரியில் இருந்து விமர்சனம் எழுதியபின்னர் தான் ஈழத்தில் தற்கால தமிழ் வளர்ச்சிபற்றியும், அதன் சிறப்பும் பற்றியும் திறமான விமர்சகர்கள் இருக்கிறார்கள் என்றும் கருதத் தொடங்கினார்கள்.

### தரம் குறைந்தது

காலம் மாறியது. பத்திரிகை உலகம் பெருகியது. தராதரம் குறைந்த மக்களுக்காக தரம் குறைந்த இலக்கியங்கள் உருவாக்கப்பட்டதால் இலக்கியத்தின் தரம் குறைந்தது. ஈழத்துத் தமிழன் என்ற முறையில் ஒரு வழிகாட்டியாக இருக்கின்றேன். இந்திய இலக்கியங்களுக்கும் ஈழத்து இலக்கியங்களுக்கும் பாரதூரமான வித்தியாசம் இருக்கும். இங்கு வருகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் அங்குள்ளவர்களின் நிலைமையை அப்படியே பிரதிபலிப்பனவல்ல. 20 வருடங்களாக இந்திய எழுத்தாளர்களோடு நெருங்கிப் பழகுகின்றேன். இந்திய எழுத்தாளர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். சில புத்தகங்கள் விற்பனைக்காக எழுதப்படுபவை. ஆனந்தவிகடன், கல்கி, குமுதம் போன்ற பத்திரிகைகள் இலக்கியங்களை வளர்ப்பதற்குப் பதில் பொருளாதாரத்தை ஈட்டப் பயன்படுகின்றன. இப்படியான பத்திரிகைகளில் எழுதுகின்ற பலர் உண்மையில் படித்து எழுதுபவர்களாக இல்லாமல் விளம்பரத்திற்காகப் பத்திரிகைகளுக்கு எழுதுகிறார்கள். இவற்றில் பல நாவல்களாக வெளிவந்தும்கூட இது ஆரம்பத்தில் வாரம் தோறும் தொடராக வெளிவந்த இலக்கியங்களே. இவற்றுக்கு அகிலனின் இலக்கியங்கள் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

அகிலன் எனது நல்ல நண்பர். பல கதைகளையும், நாவல்களையும் எழுதி பரிசுகள் பெற்றவர். ஆனாலும் சொந்தத்தில் தனி நாவலை அவர் எழுதியது கிடையாது. ஆனந்த விகடன், குமுதம் போன்ற பத்திரிகைகளைக் கொண்டு துவங்கியவர்கள் ஒருசாரார். எனினும் ஒருசாரார் மற்றவர்கள் மணிக்கொடி காலத்தில் எழுதியவர்கள்.

### விறுவிறுப்பான காலம்

1930–40 ஆகிய பத்து ஆண்டுகள்தான் இலக்கியத்தில் சற்று விறுவிறுப்பான காலம். இக்கால கதைகள்தான் இலங்கையையும் பாதித்தது. 1927ல் கல்கி ஆனந்தவிகடனில் சேர்வதற்கு முன்னர் 'நவசக்தி'யில் எழுதிய சில கதைகள் சில காலங்களின் பின்னர் 'சாரதையின் தந்திரம்? என ஆனந்த விகடனில் சிறுகதையாக வெளிவந்தது. ஆனால் இந்திய எழுத்தாளர்கள் சிலர் இக்கதைகள் 1927க்கு முன்பே வெளியானவை என்பதை மறுக்கிறார்கள். கல்கியின் எழுத்தாற்றலை அறிந்த வாசன் அவரை ஆனந்த விகடனில் சேர்த்தபோது ஒரு சிறுகதைப் போட்டியில் தமிலனுக்கு முதலாமிடமும், வி. எஸ். ராமையாவுக்கு 2-ம் இடமும் கிடைத்தது. அந்த ஆத்திரத்தில் எழுந்தது தான் "மணிக்கொடி." புதிய இலக்கியத்திற்கு வழி வகுத்தது. சிட்டி, பெ. கோ. சுந்தரராஜன், கு. பா. ரா. போன்றவர்கள் இந்தவகை இலக்கியத்தில் எழுதியவர்கள்.

### கல்கியின் சிறுகதைகள்

இந்த இலக்கியம் எழ இரண்டு காரணங்கள் இருந்தது. ஒன்று சிறுகதைப் போட்டியில் வி. எஸ். ராமையாவுக்குக் கிடைத்த இரண்டாம் இடத்தினால் ஏற்பட்ட பெருமை. மற்றையது கீழ்த்தர ஆக்கத்திற்கு மதிப்பளித்தது. இக்காலகட்டத்தில் கல்கி பல ஆங்கிலச் சிறுகதைகளைத் தழுவியும், மொழிபெயர்த்தும் தமிழ் சிறுகதைகளை எழுதினார். தமிழிலே பல சிறுகதைகள் எழுதவேண்டும் என்ற ஆர்வத்திலேயே அவ்வாறு எழுதியிருக்கலாம். வி. எஸ். ராமையாவுக்குக் கிடைத்த இரண்டாவது பரிசைப் பொறுக்காத நண்பர்கள் 'மணிக்கொடி'யை உருவாக்கினார்கள். தற்காலத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியாகப் பரிணமித்தது. இதிலிருந்துதான் புதிய இலக்கியங்களை ஆக்குகின்ற ஆர்வம் எழுந்தது. பல இலக்கியங்கள் பிரபல்யம் அடைந்தன. ஆனந்தவிகடன் செல்வாக்கைப் பெற்றதைத்தொடர்ந்து 40 ஆண்டு காலத்தில் இரண்டாவது உலக யுத்தத்திற்கு பின்னர் பல புத்தகங்கள் நின்று மாதம் ஒரு புத்தகம் என்ற அளவில் வெளிவந்ததாக அவற்றின் 'சக்தி'யும் ஒன்றாகும்.

### குமுதத்தின் இலக்கிய வியாபாரம்

மணிக்கொடி ஏற்றிருந்த பணியை கல்கி வளர்த்தது. 2-வது உலக யுத்தத்தின் பின்னர் குமுதம் புதிய இலக்கிய வியாபாரத்தை ஏற்படுத்தியது. குமுதத்தின் வெற்றி வேறு எந்தப் பத்திரிகையும் பெற்றிராத பெரு வெற்றியாக அமைந்தது. 5½ லக்ஷம் பிரதிகள் விற்பனையாகின. ஆசியாவிலேயே அதிக அளவு விற்பனையாகும் பத்திரிகை குமுதமாகும். பத்திரிகை உலகின் வெற்றிக்கும் குமுதமே காரணமாகும்.

மூன்றாவது வகையினர் பள்ளி ஆசிரியர்களாக இருந்தவர். மு. வரதராஜன், ஸ்ரீநிவாசன் போன்றவர்கள் மாணவர்களைப் பார்த்து-பெரும்பாலான மாணவர்கள் இலக்கியத்தில் கொண்டுள்ள ஈடுபாட்டைக் கொண்டு அவர்களுக்காக இலக்கியங்களைப் படைத்தார்கள். இத்தகையவர்கள் மாணவர்களைக் கவர்ந்தார்களேயன்றி இலக்கியத்தைக் கவரவில்லை. இவர்களது மொழி நடை மாணவசமூகமல்லாதவர்களுக்கு விளங்கவில்லை. இத்தகைய மூன்றாவது பிரிவினர் மாணவர்கள் மத்தியிலேயே வெற்றிகண்டனர்.

### தமிழ் கற்காத எழுத்தாளர்கள்

4வது வகை எழுத்தாளர்கள் தமிழ் கற்காது தமிழ்

## யாழ். வளாக கருத்தரங்கில் சிவபாதசுந்தரம் வெளியிட்ட சில கருத்துக்கள்

சிறுகதைகளையும், கட்டுரைகளையும் எழுதுகின்றார்கள். தமிழ் சிறுகதைகளில் அதிகளவில் ஆங்கிலச்சொற்களையும், சொற்தொடர்களையும் பெருமளவில் கையாளுகின்றார்கள். அத்தோடு இவற்றின் பொருள் சரிந்தோ தெரியாமலோ இதைஎழுதுகின்றார்கள். இது தமிழ்மொழி வளர்ச்சிக்கு எந்தவகையிலும் துணைபுரிகிறது. இச்சிறுகதைகளைத் தாங்கிய பல பத்திரிகைகள் 10 ஆண்டுகளிலேயே பெருமளவில் குவியத் தொடங்கின. எனினும் இப்பத்திரிகைகள் 3 அல்லது நான்கு மாதங்கள் வெளிவரும் பின்னர் இவை நின்றுவிடும். இவ்வாறு பலதரப்பட்ட பத்திரிகைகள் பிறந்துமடிகின்றன.

### இலங்கை இலக்கியம்

இந்த நிலையில் இலங்கையிலுள்ளவர்கள் எவ்விதம் இலக்கியத்தை வளர்க்கிறார்கள் எனப் பார்ப்போம். இந்தியாவிலுள்ள பலருக்கு இலங்கையைப் பற்றித் தெரியாது.

தொகுத்தவர்:

**ரவீந்திரன்**

இலங்கையைப் பற்றி அவர்கள் பாடப்புத்தகங்களில்கூட இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரி வரை போனாலும் நாம் அனுபவித்த, சுவைத்த தயிர், இட்லி இப்படி எதையாவது எடுத்துப்போவார்கள். அங்கே ஒரு சின்ன மற்றும் கொலனியை சிருஷ்டித்துக்கொண்டு தமது நிலையில் இருந்து சிறிதும் மாறுபடாமல் இருப்பார்கள் ஆனால் இலங்கையிலுள்ளவர்கள் ஆங்கில பழக்க வழக்கங்களில் ஈடுபாடுடையவர்களாகையால் 'அந்தந்த ஊர்ப்பழக்க வழக்கங்களோடு ஒட்டிக் கொள்வார்கள். இந்தியாவில் வாழுகின்ற மலையாளத்தவர்களும் ஓரளவிற்கு இந்தமாதிரியான ஒத்துப்போகக் கூடியவர்களே. தமிழ் நாட்டவர்கள் ஓரளவிற்குக் கிணற்றுத் தவளைகளே. இத்தகைய குறைபாட்டின் காரணமாக-தமிழ்நாட்டின் பகீரதனும், மணியனும் எழுதுகின்ற எழுத்துக்களைப் படித்து ஆத்திரப்படுகிறீர்கள். நானும் நண்பர் சிட்டியும் சேர்ந்து மணியன் தனது புத்தகங்களில் கையாண்ட சில வேடிக்கையான பதங்களைச் சேர்த்து வைத்திருக்கின்றோம். மணியன் தனது புத்தகத்தில் ஓரிடத்தில் 'பேர்னட்ஷோ'வின் 'மைபின்லேடி' என்று எழுதுவதன் மூலம் தானும் 'பேர்னட்ஷோ'வைப் பற்றிப் படித்திருப்பதாகக் காட்டிக்கொள்ளப்பார்க்கிறார் பேர்னட்ஷோ இதை எழுதவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். மைபேர் லேடியை எப்படியோ அறிந்த மணியன் பல இடங்களில் இப்படி எழுதியுள்ளார். அதேபோல 'பிக்காஷோ'வின் 'மோனலிஷா' போன்ற அழகு என்றும் வர்ணிக்கின்றார் அவரது புத்தகத்தில். "கிப்போக்கிட்டிஸம்" இதுவும் அவர் பாவிக்கும் ஒரு பதம். மணியனுக்கு தமிழ். ஆங்கிலம் எதுவுமே தெரியாது. விளம்பரத்திற்காக விரும்பத்தகாதவற்றை எழுதுகின்றார் மணியன். இலங்கைக்கு இரண்டாவது தடவையாக வருவார்கள் என்று கூறினார்கள். அவரைச் சந்திக்கின்ற சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. கல்கி அவர்கள்தான் முதன் முதலாகப் புதிய முறையில் கைக்கொண்ட பயணக்கட்டுரைகளைப் பின்பற்றித் தற்போது மணியன் பயணக்கட்டுரைகளை எழுதிவருகின்றார்.

### பகீரதன் மாறிவிட்டார்

நாம் வெளிநாட்டு பத்திரிகையாளர்களை இங்குவரவழைத்து எவ்வளவு கௌரவப்படுத்தி அனுப்புகின்றோம். ஆனால் அப்படி உபசரிக்கப்பட்டவர்கள் எங்களைப் பற்றி நன்றாகப் பேசுவதே கிடையாது. இதற்கு உதாரணமாக சிவானந்த விஜயலட்சுமியைச் சொல்லலாம். இந்த சிவானந்த விஜயலட்சுமி அம்மாள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இங்கு வந்தபோது நாம் பெருமதிப்புக்கொடுத்து அனுப்பினோம். இவ்வாறு நாம் இந்திய எழுத்தாளர்களுக்கு மதிப்புக் கொடுப்பதற்கு இன்னுமொரு காரணமுண்டு. இங்கு பல பத்திரிகைகள் கிடையாத காரணத்தினால் நாம் இவர்களுக்கும் பெருமதிப்பளித்துக் கௌரவிக்கின்றோம். அப்படி கௌரவிக்கப்பட்ட சிவானந்த விஜயலட்சுமி அதற்கு நன்றி கூறுவதற்குப் பதில் குமுதம் பத்திரிகைக்குப் பேட்டிகொடுக்கையில் தமிழர்கள் பேசிய இரண்டு வார்த்தைகளைக் கூறி இதைக் கேட்டபோது தனக்கு வேடிக்கையாக இருந்தது எனப் பேசியிருக்கின்றார். இதேபோல்தான் முன்னர் ஒருமுறை இங்கு பகீரதன் வந்தபோது அவர் கூறிய கருத்து முரண்பாட்டில் அவருக்கும் பலத்த எதிர்ப்பு வந்ததை நீங்கள் அறிவீர்கள். அவர் இப்போது மாறிவிட்டார். அண்மையில் ஒரு கூட்டத்தில் என்னை மிகமப் பாராட்டிப் பேசியதோடு இலங்கைத் தமிழர்களால்தான் இப்படி எழுதமுடியும் என்றும் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் எழுத்தாளர்கள் தமிழ் மொழியைக் கற்றபின் எழுதுகிறார்கள். தமிழைக் கற்காமல் தமிழ்ச் சொற்களை கையாள முடியாது. எனவே இலங்கைத் தமிழர்கள் தமிழ் கற்றுச் சிறந்த முறையில் தமிழைக் கையாழுகிறார்கள். 1927-ல் இருந்து 30—40 ஆண்டுகாலத்தில் மிக வேகமாக வந்த நூல்கள் தமிழ் இலக்கியத்தைப் பெருமளவில் பாதித்துவிட்டது, நல்லவேளையாக தமிழ்நாட்டில் சிறப்பாகத் திருவனந்தபுரத்தில் பட்டப் படிப்பிற்கு தற்காலத் தமிழ் இலக்கியத்தை ஆராய்கின்றார்கள், அதன்பின் மதுரைப் பல்கலைக்கழகத்தில் தற்காலத் தமிழ் இலக்கியத்திற்காக ஒரு துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு பிரிவிலும் எதிர்பாராத குறைபாடுகள் உண்டு. தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய தீவிரமாக ஈடுபட்ட எம். ஏ. பட்டம் பெற்றவர்கள், பி. எச். டி. ஊதியம் இதற்காக ஒரு கூட்டம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பலர் பி. எச். டி.க்கு பதிவுசெய்துள்ளனர். இவர்கள் இரண்டாண்டுகள் வீவில் சென்று ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்தில் ஆராயவேண்டும் என முனைந்துள்ளபோது இவர்கள் ஏதாவது ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதவேண்டும் அதற்கு அவர்கள் பாஸ் கொடுத்துவிடுகிறார்கள். இந்திய ஆராய்ச்சி நெறிமுறை நாம் எதிர்பார்ப்பதுபோல அல்ல தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றி ஆராய்ச்சி நடத்துபவர்கள் தமக்குத் தெரிந்த முறையில் சில ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதிப் பட்டம் பெறுகிறார்கள். நவீன இலக்கிய கர்த்தாக்களைப் பற்றித் தாம் அறிந்தவற்றை எல்லாம் எழுதி அவற்றிக்கு கல்கியின் சிறுகதைக்கலை, புதுமைப்பித்தனின் சிறுகதைக்கலை, அகிலனின் சிறுகதைக்கலை, மு. வ. வின் சிறுகதைகள் இப்படித் தலைப்புக் கொடுத்துக் கட்டுரைகள் எழுதுகிறார்கள். அந்தக்கட்டுரைகளில் கூட அகிலனின் சிறுகதைகளில் வரைந்துள்ள பெண்கள் எத்தனை, ஊர் எத்தனை, பூக்கள் எத்தனை என்று இதுபோன்ற ஆராய்ச்சிகள்தான் செய்கின்றார்கள். ஆறு அல்லது ஏழு ஆண்டுகளுக்கு முன் இத்தகைய கட்டுரைகள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் எழுதப்படவேண்டும் என்றதொரு நிலையிருந்தது. ஆனால் இன்று அந்தக் கட்டுப்பாடு இல்லை, இதனால் இவர்கள் தமிழிலேயே கட்டுரைகளை எழுதுகின்றனர். இவர்கள் எழுதுகின்ற கட்டுரைகளைப் படிக்காமலே பட்டம் கொடுக்கிறார்கள். இத்தகைய கட்டுரைகளைப் படிப்பது தமிழருக்கே பெரிய வெட்கம். நான் இப்படிச் சொல்வதையிட்டுச் சிலர் இங்கு மட்டும்தான் இப்படிப் பேசுகின்றேன் என்று நினைக்கலாம். நான் இங்கு மட்டுமல்ல அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடச் சொல்லியிருக்கின்றேன். இந்தியாவிலே உள்ள இன்றைய இலக்கிய நிலைபற்றி நான் சொல்லுகின்றேன்.

இந்தியாவுக்கு வியாபார நோக்கமாக வந்த மேலைத்தேயத்தவர்கள் முகலாயத்தவர்களோடு இடையிடையே சண்டைபோட்டு படிப்படியாக ஆட்சிக்கு வந்தவர்களே அன்றிப் படை எடுப்பின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. எனவே இதை எதிர்த்து நான் எதிர்ப்புக்கட்டுரைகள் எழுதினேன்,

(7-ம் பக்கம் பார்க்க)

நாடக விமர்சனம்

# கண்டியம்பதிக் காவலன்



'கலைமதி'
செல்லத்துரை

அகில இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் பேரவை வெளியிட்ட நவாலியூரானின் ''உலகம் எங்கள் கையிலே'' என்ற நாடக நூலிலிருந்து ''கண்டியம்பதிக் காவலன்'' என்ற நாடகம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

நாடகத்தின் ஆரம்பமே மிகவும் விறுவிறுப்பாகவும், தத்ரூபமாகவும் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் காலத்திற்கே எம்மை நேரில் அழைத்துச் சென்றது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. பின்னால் ஓடிக்கொண்டிருந்த 'முகிலும் நிலவும்' மேடையில் எரிந்துகொண்டிருந்த நெருப்பும் பார்ப்பது திரைப்படமோ என்ற ஐயத்தை ஏற்படுத்தி, பல நாட்களின் பின்னர் நல்லதோர் நாடகத்தைப் பார்க்கப்போகின்றோம் என்ற திருப்தியுடன் நிமிர்ந்து இருக்கச்செய்தது. இறுதிவரை விறுவிறுப்புக் குன்றாதபடி செய்த பெருமை அகில இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் பேரவையைச் சாரும்.

திரைப்படக் கலைஞர்கள் தாம் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதைத் தமது மேம்பட்ட நடிப்பின் மூலம் காட்டினார்கள். ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் பாத்திரத்தில் நடித்த நவாலியூரான் திரு. செல்லத்துரை நடிகர் திலகம் சிவாஜியைப் போலத் தோற்றமளித்ததுடன் நடிப்பிலும் சுழத்து சிவாஜி எனப் போற்றக்கூடியவாறு செய்துள்ளார்.

மேடையில் மைக் பொருத்தாமலே தமது வெண்கலக்குரலால் ரசிகர்களின் காதுசெவிடுபடக்கூடியதாக கர்ஜனைபுரிந்து வீரமவீரன் முத்துவீரனைப் பாத்திரத்தை உணர்ந்து நடித்த கலைக்காவலர் சாமலிங்கத்தின் சிம்மக் குரலைப் பற்றிக் குறிப்பிடாமல் விட முடியாது.

திரு. யேசுதாசனின் பின்னணி இசையுடன் ஒலித்த நவாலியூரானின் பாடல்களை தமது இனிய குரல்களினால் திரு. பாலச்சந்திரனும் திருமதி கமலலோஜனி பரமசிவமும் மேலும் மெருகூட்டியுள்ளார்கள். மாயவனாகத் தோன்றின அன்ரன் எமது உள்ளத்தைக் கவரக்கூடியவகையில் நடித்திருந்தார். அரிமன்னனாகத் தோன்றிய றெமீஜியஸின் தோற்றத்திற்கும், நடிப்புக்கும் ஏற்றவகையில் அவரது குரல் அமையாதது ஒரு குறையாகத் தெரிந்தது. வில்லனாக நடித்த ஜெயசிங்கம் தனது பாகத்தைச் சோடை இன்றிச்செய்தார். இங்கிலீயாக மரிசின் குரலிலும் நடையிலும் தளபதிக்குரிய எடுப்பு இருக்கவில்லையென்றாலும் மற்றையோருக்கு ஈடுகொடுத்து நடித்துள்ளார். சித்திரனாக வந்து துடிதுடித்து இறந்த காட்சியில் மட்டும் நடித்தாலும் பாலசிங்கம் எல்லோரினதும் உள்ளத்தில் இடம்பிடித்துள்ளார்.

இயக்குநர் நாமமணி அ. நந்குணசேகரனின் நெறியாள்கையின் தனித்துவத் திறமை நாடகத்தில் பளிச்சிட்டது.

மேடையில் நவாலியூரான் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார். நவாலியூரான் திரு. செல்லத்துரைக்கு கலையரசு சொர்ணலிங்கம் 'கலைமதி' என்ற பட்டத்தை வழங்கினார்.

இந்நாடகத்தைப் பெருந்திரளான மக்கள் கண்டுகளித்தது குறிப்பிடத்தக்கது.

—சயா

## அம்பலத்தாடிகளின்
# 'ஏகலைவன்'

வருடந்தோறும் புத்தாண்டு தினத்தில் சிறந்த நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றும் நெல்லியடி அம்பலத்தாடிகள் இவ்வருடம் 'ஏகலைவன்' என்ற இசை நாடகத்தை மேடையேற்றினர். வடமோடி இசையும் காத்தவராயர் கூத்து மெட்டுக்களும் இணைய உடுக்கு, மிருதங்கம், வீணை, தாளம் ஆகிய இசைக் கருவிகளின் ஒத்திசைவுடன் அண்ணாவியின் நெறிமுறைக் கட்டளைகளுக்கமைந்து மிகவும் கட்டுப்பாட்டுடனும் கதையமைப்புப் பிறழாமலும் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது.

பஞ்சபாண்டவர்களின் வில்வித்தைக் குருவான துரோணாச்சாரியாரைத் தன் மனத்தே குருவாக வரித்த கானகத்துவேடனாகிய ஏகலைவன் அவரது சிலையை வடித்து வணங்கி வில்வீரனானான். இவனது திறமையைக் கண்டு பொறுக்காத பஞ்சபாண்டவர்களும் துரியோதனனும் பீஷ்மரை அழைத்து விஷயத்தைக் கூறிப் பின்னர் துரோணருடன் கானகத்துக்குச் சென்று வேடனாகிய ஏகலைவனைக் காண்கிறார்கள். இவர்களது சூழ்ச்சியால் துரோணர் குருதட்சணையாக ஏகலைவனிடம் சிறு கட்டைவிரலை வெட்டித் தரும்படி கேட்கிறார். ஆளும் வர்க்கத்தினர் எப்போதும் ஏழைகளை வஞ்சித்துக்கொண்டு அவர்களை முன்னேறவிட மாட்டார்கள் என்ற உண்மையை இந்தத் தாளக் கூத்தின் மூலம் அம்பலத்தாடிகள் மிகவும் செம்மையாக எடுத்துக் காட்டிவிட்டார்கள்.

நாடகத்தின் ஆரம்பத்திலேயே கதை சொல்பவரின் கூற்றுகளைத் தொடர்ந்து பஞ்சபாண்டவர்கள் "ஆண்ட பரம்பரை நாங்கள்" என்ற இனிமையான பாடலுடன் குதிரைகளில் வருவதுபோலக் காண்பிக்கப்படுகிறது. குறியீடுகள், அசைவுகள்மூலம் மிகவும் அழகாக இக்காட்சிகள் அமைந்திருந்தன.

யாழ்ப்பாணத்தில் பொதுவான கூத்துமேடை மரபுகளுக்கு மாறாக மிகவும் சிக்கனமாக ஆனால் கவர்ச்சியானதான [illegible] அமைக்கப்பட்டுப் பின் பகுதியாக வெண்திரை கட்டப்பட்டிருந்தது. பொருத்தமான இடங்களில் வர்ண மின் வீச்சுக்கள், முக ஒளிகள் காண்பிக்கப்பட்டு நாடக ஓட்டத்தினை மேலும் கவர்ச்சியாகவும் கருத்தாகவும் இயங்கச்செய்தமை பாராட்டிற்குரியது.

நாடக ஆரம்பம் முதல் இறுதி வரை நடிகர்கள் அனைவரும் தாளலயத்துடன் ஆடியவண்ணமும் இனிய மெட்டுக்களில் (வடமோடி, காத்தான் மெட்டுகள்) பாடியவண்ணமும் கதையை நடத்திக்கொண்டிருந்தனர். அரசகுமாரர்களுக்கும், வேடுவர்களுக்கும், முனிவர்களுக்கும் பொருத்தமான ஆடை - ஆபரண - அலங்காரங்கள் செய்யப்பட்டு மிகவும் எடுப்பாகக் காணப்பட்டனர்.

நடிகர்கள் ஒவ்வொருவரும் கூட்டுப்பொறுப்புடன் தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரங்களை உணர்ந்து நன்றாகச்செய்தனர். ஒலிபெருக்கி மாத்திரம் சில சந்தர்ப்பங்களில் ஒத்துழைக்க மறுத்தது. ஆனாலும் நடிகர்களின் குரல்வளம் இக்குறைபாட்டை நிரவிவிட்டது.

இந்த நாடகத்தின் பிரதியாக்க கர்த்தாவும், இயக்குநருமான திரு. இளைய. பத்மநாதன் உண்மையான பாராட்டிற்குரியவர்.

இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சி வரலாற்றிற்கு 'கந்தன் கருணை' என்ற இசை நாடகத்தைத் தயாரித்துப் புகழ்பெற்ற அம்பலத்தாடிகள் நிச்சயமாக 'ஏகலைவன்' மூலமும் நிரந்தர இடத்தைப் பெறுவார்கள்.

—நெல்லை க. பேரன்

# தமிழ்ப் படங்களில் முத்தக் காட்சிகள்!
## கமல் என்ன சொல்கிறார்?

இந்திரா சகாப்தம் முடிந்து ஜனதா சகாப்தம் தொடங்கிய பிறகு இந்தியாவில் எவ்வளவோ மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. அவைகளுள் ஒன்று திரைப்படத் தணிக்கை விதிகள் ஆகும். மத்திய அரசின் செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் எல். கே. அத்வானி சினிமா தணிக்கை விதிகளைச் சற்றுத் தளர்த்தியுள்ளார். கதையுடன் தொடர்புடையதாகவும் கலையம்சத்தோடும் இருந்தால் முத்தக்காட்சிகள் கூட இந்திய சினிமாப் படங்களில் அனுமதிக்கப்படும் என்று அவர் சென்னையில் அறிவித்தார். கலகாமபரா என்ற கன்னடப்படத்தில் முத்தக்காட்சிகள் அனுமதிக்கப்பட்டு படம் வெளியாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்த அறிவிப்பைக் கேட்டதும் முத்தக்காட்சிகளைத்தவிர மற்ற அனைத்தையும் தங்கள் படங்களில் இடம்பெறச் செய்துவிட்ட தயாரிப்பாளர்கள் போட்டியிட்டுக்கொண்டு முத்தங்களைப் படம்பிடித்துத் தள்ளுகிறார்கள். தமிழ்ப்படங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. டி. என். பாலு கதை வசனம் எழுதி டைரக்ட் செய்யும் 'சட்டம் என் கையில்' என்ற படத்தில் கமலஹாசனுடன், பிரெஞ்சு நாட்டு நடிகை கதரின் என்பவர் நடித்துவருகிறார். கமலஹாசனும் - கதரினும் ஆங்கில முறையில் முத்தம் கொடுத்துக் கொண்ட காட்சி படம் ஆக்கப்பட்டுள்ளது.

இந்தி நடிகர் ஐ. எஸ். ஜோகர் தயாரித்து அவரே நடித்துள்ள நஸ்பாந்தி என்ற இந்திப் படத்தில் அவர் நர்ஸ் வேடத்தில் நடித்த நடிகையை முத்தமிடும் காட்சி படமாக்கப்பட்டது. இந்தக் காட்சி கதைக்குத் தொடர்பு இல்லாமலும் கலைநோக்கத்தோடும் இல்லையென்று தணிக்கையில் அக்காட்சியை வெட்டிவிட்டனர்.

ஆனால் வேறு இந்தி படத்தில் பிரேம்நாத் என்ற நடிகர் ஒரு நடிகையை முத்தமிடும் காட்சி தணிக்கையில் அனுமதிக்கப்பட்டது. கதைக்கு முக்கிய தொடர்பு இருப்பதாகவும் கலையம்சத்தோடும் இருப்பதாக காரணம் காட்டப்பட்டது.

சட்டம் என் கையில் என்ற தமிழ்ப் படத்தில் கமலஹாசன்—கதரின் முத்தக் காட்சி அனுமதிக்கப்படுமா? காலம்தான் இதற்கு விடையளிக்கவேண்டும்.

இதற்கிடையில் எம். ஜி. ஆர். உள்ளிட்டுப் பலர் முத்தக்காட்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

### முத்தக்காட்சிகளைப் பார்க்க அலையலையாக ரசிகர்கள்

முத்தக்காட்சிகள் படங்களில் தேவைதானா? சினிமா ரசிகர்கள் ஆங்கிலப்படங்களுக்காகவும் அதில் வரும் சரமாரிமுத்தக் காட்சிகளுக்காகவும் அலைவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். கிளியோபட்ரா என்ற படத்தில் ரேச்ஸ் காரிகனும் ரிச்சர்டு பர்ட்டனும் என்ன வசனம் பேசினார்கள். என்பதைவிட எலிசபெத் டெயிலர் எத்தனை முத்தங்கள் கொடுத்தார் என்பதை நினைவு வைத்திருக்கும் ரசிகர்களே அதிகம்.



ஒரு விஷயம் மறைபொருளானது என்றால் அதைக் காண ஆவலும் வேட்கையும் அதிகம் கொள்ளுதல் மனித இயல்பாகும் அதுவே மறைக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட விஷயம் அல்ல என்றால் சாதாரணமாகவே மனம் அதைக்காணும்.

சினிமா என்பது ஒரு கலை மட்டுமல்ல. வியாபாரம். பெருத்த லாபம் தரும் சர்வதேச வணிகம். இதில் பின்னடைந்துவிடாமல் மற்ற நாட்டினருடன் போட்டியிட்டு பொருளாதார வளர்ச்சி பெற வேண்டும். இவைகளையெல்லாம் கருதும்போது முத்தக்காட்சிகளை ஏன் ஆதரிக்கக்கூடாதென்று தோன்றுகிறது.

### இவர்களுக்கா கற்றுத்தரவேண்டும்?

கதையோடு இணைந்ததாக இருந்தால்தான் முத்தக்காட்சிகள் அனுமதிக்கப்படுமென்று தான் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் அந்தக் காட்சிகளைக் கதையோடு எப்படி இணைப்பது என்ற கலையை நமது தமிழ்ப்படத் தயாரிப்பாளர்களுக்கு கற்றுத் தரவா வேண்டும்? மக்களின் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் சிதைக்கும் விதத்தில் ஆபாசக் காட்சிகளாக படம் பிடிக்காமல் இருந்தால் முத்தக்காட்சிகளை வரவேற்கலாம் தான்.

### கமல் கூறியது

சட்டம் என் கையில் என்ற படத்தில் கதரின் என்ற பிரெஞ்சு நடிகைக்கு முத்தம் கொடுத்தது பற்றி கமலஹாசன் தெரிவித்த கருத்துக்கள்:—

தமிழ்ப்படத்தில் முதன் முதலாக முத்தக்காட்சியில் நடித்தவன் என்ற முறையில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதிலும் மேல் நாட்டு நடிகைக்கு முத்தம் கொடுத்ததில் மேலும் மகிழ்ச்சியடைகிறேன். இது நான் கொடுத்த முதல் முத்தமில்லை. இதுவரை நான் கொடுத்த முத்தங்கள் எண்ணூறுக்கும் மேலிருக்கும். நான் கொடுத்த முத்தங்கள் படமாக்கப்பட்ட முதல் முத்தம் இதுதான்.

முத்தம் கொடுத்து நடிப்பது தவறு என்று நான் கருதவில்லை. பணம் கொடுத்து அப்படி நடிக்கச் சொன்னால் நான் நடித்துக்கொண்டே இருப்பேன். முத்தம் கொடுப்பது தமிழ்ப்பண்பாடு இல்லைத்தான். ஆனால் முத்தம் கொடுப்பது தமிழர்களின் பழக்கம் இல்லை என்று சொல்லிவிட

[7-ம் பக்கம் பார்க்க]

# தயாரிப்பில் இருக்கும் நம் நாட்டுத் தமிழ்த் திரைப்படங்கள்

(வெள்ளவத்தை)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ''வாடைக்காற்று'' ''தென்றலும் புயலும்'' ஆகிய இரு திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு ரசிகர்களுக்குக் கிட்டியுள்ளது.

அடுத்து வெளிவரப்போகும் தமிழ்ப்படங்களைப் பற்றிய தகவல்களை இங்கு தருகிறோம்.

### தெய்வம் தந்த வீடு

மலையகத்தைச் சேர்ந்த வர்த்தகரான வி. கே. டி. பொன்னுசாமி தயாரிக்கும் சினிமாஸ்கோப் திரைப்படமான ''தெய்வம் தந்த வீடு'' படப்பிடிப்புகள் எல்லாம் முடிவடைந்து படத்தொகுப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் திரையிடப்படலாம்.

''தெய்வம் தாதள்வரகலைஞனையும் நடனநங்கையையும் பற்றிய கதை. அளவெட்டி பத்மநாதனின் நாதஸ்வர இசையும், வடமாகாணத்து புனித ஸ்தலங்களும் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தாக அமையப்போகிறது.

இந்த திரைப்படத்தில் நடிகர் ஏ. ரகுநாதன், டீன்குமார், கே. ஏ. ஜவாஹர், பிரான்சிஸ் எஸ். என். தனரத்தினம், சந்திரகலா, ஜெயதேவி ஆகியோருடன் கலையரசு சொர்ணலிங்கம் கௌரவநடிகராக நடிக்கிறார். கமிராவை எம். ஏ. கபூர் கையாள டைரக்ஷனை வில் பிறட் சில்வா செய்துள்ளார்.

### ஏமாளிகள்

கோமாளிகள் திரைப்படத்திற்கு கதைவசனம் எழுதிய நகைச்சுவை நடிகர் எஸ். ராமதாஸின் 'ஏமாளிகள்' படத்திற்கான நான்கு பாடல்கள் ஸ்டூடியோவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

கண்ணன்நேசம் இசையமைப்பில் உருவான பாடல்களை ஸ்ரனி சிவானந்தன், முத்தழகு, கலாவதி, எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் பாடியுள்ளார்கள். பாடல்களை ஈழத்து ரத்தினம், பௌசுல் ஹமீர் ஆகியோர் எழுதியுள்ளனர்.

இந்த திரைப்படத்தில் எஸ். ராமதாஸ், எஸ். செல்வசேகரன், ராஜகோபால், கே. ஏ. ஜவஹர், சுபாஷினி, சுப்புலட்சுமி ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடிப்பார்கள்.

புதியகாற்று, கோமாளிகள் திரைப்படத்தை டைரக்ட் செய்த எஸ். ராமநாதன் டைரக்ஷன் பொறுப்பை ஏற்றுள்ளார்.

### நெஞ்சுக்கு நீதி

டாக்ஸி டிரைவர் தமிழ்ப் படத்தை தயாரித்த தங்கமணி பிக்சர்ஸ் நெஞ்சுக்கு நீதி திரைப்படத்தில் சில காட்சிகள் புத்தாண்டில் சிலோன் ஸ்டூடியோவில் படமாக்கப்பட்டது.

இந்தத் திரைப்படத்தில் தென்னிந்திய புகழ்பெற்ற நடிகரான ஸ்ரீகாந்த், ஈழத்துநடிகரான டீன்குமார் முக்கியபாத்திரத்தில் நடிக்கின்றனர். சந்

(7ம் பக்கம் பார்க்க)

நாகம்ஸ்
(மன்னார்)
தினசரி
6-45, 10-00
விஜயகுமார்
நடித்த
தாயில்லாக்குழந்தை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
வாடைக்காற்று

வெலிங்டன் (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
ஆண்டவன் கட்டளை

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

கடைசி சில தினங்கள் மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரியும்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)
8ந் திகதி முதல்
முத்துராமன், ஸ்ரீவித்யா, சந்திரகலா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

5-வது வெற்றி வாரம்
ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ்
நடித்த
நல்லநேரம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், [நிர்மலா, அசோகன் நடித்த]
ஜானகி சபதம்

Regal (Jaffna) 2nd Crowred Week
Daily 4-45, 7-00 and 9-30 p.m.
TONY CURTIS ROGER MOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
3-வது வாரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
சிவாஜி நடிக்கும் கந்தன்கருணை ஈஸ்ட்மென் கலர்
30-ம் திகதி சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
SADKO

Rio (Jaffna) (Phone: 7607) Now showing
To all Patrons Newly Rectifed Sound System
By Siwclair Radio Nics
Man in the Iron Mask
(Family Entertainmen)

## தயாரிப்பில......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திரைகளை கதாநாயகியாக நடிக்கிறார்.

திருமதி மாலினிதேவி சோமசேகரன் தயாரிக்கும் 'நெஞ்சுக்கு நீதி' திரைப்படத்தில் கே. ஏ. ஜவாஹர், எஸ். ராமதாஸ், கலைச்செல்வன், எஸ். எஸ். தனரத்தினம், எம். எம். லத்தீப் ஆகியோர் நடிக்கவிருக்கின்றனர். கபூர் கமீரானை இயக்க, சுண்டிக்குளி சோமசேகரன் டைரக்ட் செய்கிறார்.

### 'நெஞ்சுக்குத் தெரியும்'

பிரபல டைரக்டர் லெனின் மொறாயஸ் டைரக்‌ஷனில் உருவாகிய சினிமாஸ்கோப் திரைப்படமான 'நெஞ்சுக்குத் தெரியும்' படப்பிடிப்புகள் சில காலம் தடைப்பட்டிருந்து மீண்டும் படப்பிடிப்புகள் ஆரம்பமாகியுள்ளது.

இந்தப் படத்தில் சந்திரகலா, ஹெலன்குமாரி, மனோகரன், ஆஸாத் ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடிக்கின்றனர். கமாரான டைரக்‌ஷன்.

இரு பொறுப்புகளையும் லெனின் மொறாயஸ் ஏற்றுள்ளார்.

### 'அன்றொரு நாள்'

டாக்டர் இந்திரகுமார் கதை வசனம் எழுதியுள்ள 'அன்றொரு நாள்' திரைப்படத்தின் படப்பிடிப்புகள் மே மாதம் ஆரம்பமாகவுள்ளது. நடிகர் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தின் டைரக்‌ஷன் பொறுப்பை 'நான் உங்கள் தோழன்' டைரக்டர் எஸ். வி. சந்திரன் ஏற்றுள்ளார்.

## இசைக்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்கள். இந்நெறும்புக் கூட்டம்போல மண்ணையும் தட்டிக்கொண்டு ஒருவரின்பின் ஒருவராக – அதாவது சபை குழப்பிகளாகக் கொஞ்சமும் பண்பாடில்லாமல் வெளியேறிக்கொள்பவர்களும் இந்த ரசிக மகாஜனங்களிடையே நிறைய இருக்கிறார்கள். சில கலைஞர்கள் மேடைக்கு வந்தால் மட்டும் சில ரசிகர்கள் முன்னாலே போய் உட்கார்ந்து கொண்டு சபாஷ் போடுவார்கள் அல்லது ஒரே சிராகக் கச்சேரி முடியுமட்டும் தலையை ஆட்டிக்கொண்டே இருப்பார்கள். இப்படி எவ்வளவோ விசித்திர பிறவிகளை நாம் காண்கிறோம்.

எத்தனைதான் உயர்தரமான விழாக்களை நடாத்தினாலுஞ்சரி, எவ்வளவுக்குத்தான் உபதேசித்தாலுஞ்சரி இப்படியான ரசிக மகாஜனங்களை வழிக்குக் கொண்டுவருவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்குமென்பது மட்டும் உண்மை.

—''நாட்டியதாரகை''

## சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

'வேற வேலையா இல்லையா. எங்களுக்கு வாறவன் போறவன்ட குறையைப் பார்ப்பது தானே வேலை!' என்பது போலும் ஒன்று;

என் மனத்திரையில் சுற்றிச் சுற்றி... மஸ்கட், நோட்ஸ்புக், பப்ளின்...

'இருபத்திரண்டு ரூபாய் ஐம்பது சதம்.'

'அம்ரலா என்ற பெயர் ஏன் வந்ததென்றால் ... நான் அடிக்கடி விட்டுக்கொள்ளும் பகடிதான் இது. இன்று ஏன் இப்படிக் கசக்கிறது.

நான், அழுகிறேனே!

(யாவும் கற்பனை)

வெலிங்டன்? (செட்டிகுளம்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி-ஜெயலலிதா
கலாட்டா
கல்யாணம்

## தமிழ்ப்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது. காதலனும் காதலியும், கணவனும் மனைவியும் முத்தமிட்டுக்கொள்வது உலகம் முழுவதும் உள்ள பழக்கம் ஆகும். சினிமா என்பது வெறும் நடிப்பு. நடிப்புக்காக முத்தம்கொடுப்பதில் தவறு இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

ஆனால் முத்தம் கொடுப்பது தமிழ்ப் பண்பாடு அல்ல. முத்தம் தரும்படங்களை எதிர்த்துப்போராட்டம் நடத்துவேன் என்று எம். ஜி. ஆர். அறிவித்துள்ளார். அவர் 30 ஆண்டு காலமாக சினிமாவில் நடிக்கிறார். பல படங்களில் நடித்தவர். பல படங்களைத் தயாரித்து டைரக்ட் செய்தவர். அதனால் அவர் ஆராய்ந்து தான் சொல்லியிருப்பார்.

### சொன்னார்கள் செய்தேன்

கமலஹாசனுக்கு முத்தம் கொடுத்த கதரின் கருத்துக்கள்: முத்தத்திற்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதைக் காண எனக்கு ஆச்சரியமாக உள்ளது. எங்கள் நாட்டில் (பிரான்சு) இருவர் சந்தித்துக்கொண்டால் முத்தம் கொடுத்துக்கொள்வோம். இது அன்பின் அடையாளம். உங்கள் நாட்டுப் பழக்கம் எனக்குத் தெரியாது. தெரியாத ஒன்றில் நான் தலையிட விரும்பவில்லை. முத்தம் கொடுக்கச் சொன்னார்கள். கொடுத்தேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும் என்று காதரின் கூறினார்.

இவர்களுடைய கருத்துக்கள் இருக்கட்டும். இவர்களுடைய முத்தத்தைப் பார்த்து ரசிகர்கள் என்ன சொல்லுவார்கள் என்று அறிய படம் வெளியாகும்வரை காத்திருப்போமா?

—வி. ரவிச்சந்திரன்

## நவீன...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ஆய்வு நடத்துகின்ற மாணவர்கள் தமிழ் பற்றி நிறைய விஷயங்களைச் சேகரிக்கின்றார்கள். ஆனால் அவற்றில் பொருட் செறிவில்லை.

### அதிசயம்

20 ஆண்டுகளுக்கு முன் இலங்கை எழுத்தாளர்களைப் பற்றி ஈழகேசரியில் எழுதியிருந்தோம். துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ந்து பத்திரிகைகள் ஈழத்தில் வெளிவரவில்லை. 'மல்லிகை' 15 ஆண்டுகள் தொடர்ந்து வெளிவருவது அதிசயமாகவிருக்கிறது. இத்தகைய தியாக எழுத்தாளர்கள் உருவாகவேண்டும். இதே சமயம் இங்குள்ளவர்கள் அநேகர் இத்தகைய இலக்கியங்களுக்கு ஆதரவுகொடுக்காமல் பொழுதுபோக்கு இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அத்தகைய பத்திரிகைகளைப் பெருமளவில் இறக்குமதி செய்கிறார்கள்.

இந்தியாவில் வெளியாகும் குமுதம் பத்திரிகை இங்கு ஐயாயிரம் பிரதிகள் இறக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில் !

இலவசக் கருத்தரங்கு

1978ம் ஆண்டு மே மாத I C.M.A. பரீட்சை
1978ம் ஆண்டு ஜூன்மாத I A.A பரீட்சை
திரு. I. T Benedict
திரு. M. நல்லந்துவன்
ஆகிய கொழும்பில் பிரசித்தி பெற்ற Oxonia கல்வியகத்தின் கைதேர்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்படவிருக்கிறது

ஒவ்வொரு பாடத்திலும் இருபதிற்கு மேற்பட்ட கேள்விகளுக்கு பூரண மறுமொழிகள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

ஆரம்ப திகதி :
ஐ சி. எம். ஏ பிரிவு ஏ. 3-5-78
ஐ சி எம் ஏ பிரிவு பி 8-5-78
ஐ. ஏ. ஏ பகுதி 1. 16-5-78
ஐ ஏ ஏ பகுதி 2 16-5-78
ஐ ஏ பி பவுண்டேஷன். 9-5-78
ஐ ஏ பி இன்ரமீடியற் 18-5-78

Cantabia Institute
(Shoot of Oxonia)
முதல் மாடி, A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம்,
இல. 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
9178

Now in Jaffn. !
Free Pre Examination Seminar
For I. C. M. A. May 1978
I. A. A. June 1978
Examinations :
By Colombo's Leading Lecturers from Oxonia Institute
Including
Mr. I. T. Benedict
Mr. M. Nallanthuwan
Complete Answers to more than 20 probable examination questions on each subject. Distributed free at the Seminar.
Date of commencement
I.C.M.A Section A - 3-5-78
I.C.M.A Section B - 8-5-78
I.A.A Part I - 16-5-78
I.A.A. Part II 16-5-78
I.A.B. Foundation 9-5-78
I.A.B. Intemediate 18-5-78
CANTABIA INSTITUTE
(Shoot of Oxonia)
First Floor, A. S Sangarapillai Building,
166, Hospital Road, Jaffna. 9177

# தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மேதினத்தன்று நடைபெறும் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, செந்தமிழர் இயக்கம், மொழிவழித் தொழிற்சங்கங்களோடு ஏனைய சங்க அங்கத்தவர்களையும் ஒன்றிணைய வுமாறு கோரும் தீர்மானமொன்று தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைச் செயலகத்தில் மேதினக் கூட்டணி அமைப்புக் குழுத் தலைவர் திரு.மு.ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அடுத்துச் சகல தமிழ்த் தொழிலாளர்களையும் ஒன்று சேருமாறு திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வி. பொன்னம்பலம், திரு. ஐ. தி. மூர்த்தி ஆகியோர் கைச்சாத்திட்ட துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது.

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமான தமிழ் ஈழம் என்று ஏற்று இங்கு வாழும் தமிழ் இனத்தவர்களுக்கு புதிய இனம் என்ற அந்தஸ்துப் பெறுவதற்கு நாம் சார்ந்த தொழிற்சங்கங்களை வற்புறுத்துவது இம்மேதினத்தில் எந்தத் தொழிற்சங்கத்தைச் சார்ந்த தமிழ் பேசும் தொழிலாளரும் எதிர்பார்க்க வேண்டியதும் வற்புறுத்த வேண்டியதுமான பிரச்னையாகும் என அத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டது.

(கா-இ)

# நவீன இந்திய இலக்கிய....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மதிசெய்யப்படுகின்றன. இவை 5 லட்சம் பேரால் படிக்கப் படுகிறது.

இதற்குக் காரணம் இங்கு போதிய பண்டம் கிடைக்க வில்லை. இங்குள்ள எழுத்தாளர்கள். அடிப்படைத் தமிழ் கற்றவர்கள். தமிழ் கற்காத தமிழ்மொழியைக் கையாள்வது கஷ்டம். அதற்கு மேலாக இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளின் தாக்கத்தைக் கொடுக்கிறது. இதனால் இந்திய எழுத்தாளர்களைவிட இலங்கை எழுத்தாளர்கள் தரம் கூடியவர்கள். அருள். சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயதுவந்துவிட்டது' என்ற நாவலைப்படித்து எனது நண்பர் இட்டி வெகுவாகப் பாராட்டி அந்த நாவலைப் பற்றி 'கணையாழி' பத்திரிகையில் நான்கு பக்கத்தில் விமர்சனம் எழுதியுள்ளார்.

சொல்லாடல் புரிகிறதா!

காட்டாறு, நிலக்கிளி போன்ற நாவல்களுக்கு பெரு வரவேற்பிருந்தது. நான் அவர்களிடம் இந்தக் கதைகளின் சொல்லாடல்கள் உங்களுக்குப் புரிகிறதா? எனக் கேட்ட போது சில சொற்களின் பொருள் எமக்குப்புரியாவிட்டாலும் கதை சொல்லப்படுகின்ற பாங்கு நமக்கு அந்தக் கதையின் போக்கைப் புரிய வைக்கிறது. அந்த அளவிற்குச் சிறப்பாகக் கதை புனையப் பட்டுள்ளது என்று பாராட்டினார்கள்.

இதுதான் எமக்குள்ள அளவுகோல், அங்குள்ளவர்களுக்கு எமது சொற்களின் கருத்துக்கள் புரியாது என எண்ணி நீங்கள் உங்கள் ஆக்கங்களை இந்தியாவிற்கு அனுப்பத்தவறு கிறீர்கள். அங்கு பல மதிப்பீட்டாளர்கள் நமது ஆக்கங்களுக்கு மதிப்பளிக்கக்காத்திருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள பல நவீன ஆக்கங்கள் அங்கு கிடைப்பதுதான் பெரும் சங்கடமாக இருக்கின்றது. இந்தியாவின் மூலப்பொருளில் இருந்து தயாரிக்கப்படுகின்ற எந்தப் பொருட்களும் இந்தியாவிற்கு இறக்கக்கூடாது என்பது அவர்களது கொள்கை. எனவே தான் தமிழும் இந்தியாவின் மூலப் பொருள் ஆதலால் பிற நாட்டுத் தமிழ் புத்தகங்களும் இங்கு இறக்குமதி செய்யக்கூடாது என்கிறார்கள் போலும்.

கலாச்சாரப் பரிவர்த்தனை பற்றி இன்று இரு நாடுகளும் பேசிக்கொள்கின்றன. இந்த வகையில் இன்று கபிலவஸ்துச் சின்னங்கள் வந்துள்ளன. ஆனால் இந்தக் கலாச்சார பரிமாற்றம் ஒரு வழிப்பாதையாகவே உள்ளது.

இந்தியாவிலிருந்து எத்தனையோ லட்சம் பெறுமதியான பணம் புத்தக ஏற்றுமதியில் பெறப்படும் இந்த வேளையில் வருடத்திற்கு ஒரு ல... சமாவது அவர்கள் இறக்குமதி செய்வார்கள். எனவே இங்கிருந்து பல நவீன ஆக்கங்களையும் இலக்கியங்களையும் அனுப்புங்கள். இந்தவகையில் நீங்கள் நிச்சயம் உதவுவீர்கள் என நம்புகின்றேன்.

இறுதியாக ஆக்க நிலையில் 5 சத வீதத்தால் நமது ஆக்க இலக்கியங்களின் தரம் கூடித்தான் காணப்படுகிறது என்றும் கூறினார்.

## காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

வாகனுலிப்பெட்டிகளுக்கான லைசென்ஸ் பெறுவதற்கான காலஎல்லை அடுத்த மாதம் 31 ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போதுமக்கள் பலரின் வேண்டுகோளின் பேரிலேயே இது நீடிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத்தொகுதிக்கு பொதுவான பஸ்பிரயாணிகள் சங்கம் ஒன்றை அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலைபண்ணாகம் மெய்கண்டான்பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது. (இ)

## தமிழ் தொழிலா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அணி என பலபிரிவுகளாக நடைபெறும்.

கூட்டத்தில் மேதின அமைப்புக்குழுத் தலைவர் திரு. மு. ஆலாலசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், கே. துரைரத்தினம், வி. என். நவரத்தினம், வி. யோகேஸ்வரன், செந்தமிழர் இயக்கத்தினர் சார்பில் வி. பொன்னம்பலம், இவா சுப்பிரமணியம் மற்றும் திருமதி ம. அமிர்தலிங்கம், மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், ஐ. ரி. சம்பந்தன் உட்பட பல மொழிவழித் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்துவர்.

பொதுக்கூட்ட ஆரம்பத்திற்கு முன்னர் கலாவினோதன் அளிக்கும் 'தமிழர் மேதினம்' என்னும் வில்லிசையும்; விழா இறுதி நிகழ்ச்சியாக வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திச் சங்கத்தின் 'மல்லன் மடையன் போர்,' கலாமணி வி. வி. வைரமுத்துவின் "நந்தனார்" நாட்டுக் கூத்துக்களும் இடம்பெறும். (கெ(-கா-இ

# "தமிழ் மாணவர்க்குப் பலவழிகளிலும் பாதிப்பு" — எதிர்க்கட்சித்தலைவர்

(யாழ்ப்பாணம்)

'இலங்கையில் தமிழ் மாணவர்கள் கல்வித்துறையில் பல வழிகளில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.' என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெளிவாரி பட்டப் படிப்பு நிறுவன மாணவரால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

திரு. மா. குலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது.

"இலங்கையில் தமிழ் மாணவர்கள் கல்வித்துறையில் பல வழிகளில் பாதிக்கப் பட்டு வருகின்றார்கள். வெளிவாரி பல்கலைக்கழக பட்ட படிப்பு மாணவர்களில் நிதி வசதி குறைந்தோருக்கு கடன் வசதி கிடைக்க நிதியமைச்சருடனும் கல்வித்துறையில் ஏற்படுகின்ற பிரச்னைகளை தீர்வு காணும் வகையில் கல்வியமைச்சின் உயர்கல்விச் செயலாளர் திரு. சல்பகேயுடனும் தொடர்பு கொண்டுஅதற்கான உதவிகளை வெளிவாரி பட்ட படிப்பு நிறுவன மாணவர்கட்கு அரசாங்கத்திடமிருந்து பெற்றுத்தர ஆவன செய்வேன்'' என்றார்.

திரு.குலேந்திரன் தமது தலைமையுரையில் "இலங்கை பல்கலைக்கழக வெளிவாரி சேவை முகவர் நிலையம் தமிழ்மாணவர்களைப் பொறுத்தவரையில் மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்வதாகத் தெரிவித்தார்.

மாணவர் சார்பில் திரு. த. இலகுஞானரஞ்சன் உரையாற்றுகையில் "கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு உள்வாரி மாணவராக நுழைந்து பட்டப் படிப்பு கற்கமுடியாத தமிழ் மாணவர்களுக்கு இலங்கை வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழிகாட்டிவருவது பாராட்டுக்குரியது. வெளிவாரி மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்த சிறந்த அறிஞர்களின் சேவையை அதற்குப் பொறுப்பான அதிகாரிகளின் அனுமதி பெற்றுத்தரவேண்டுமென்றார்.

திரு. என். சோமசேகரம் தனது உரையில், வெளிவாரி பட்டப்படிப்பு பயிலும் சிங்கள மாணவர்களுக்கு உள்ளூராட்சிசபைகளில் நூல்கள் பெற்று பயன்பெறுவது போல தமிழ்மாணவர்கட்கு இவ்வசதி கிடைப்பதில்லை மேலும், இலங்கை வானொலி சேவையில் சிங்களமொழி மூலம் வெளிவாரி பட்டப் படிப்பு விரிவுரைகள் நடைபெறுவதைப்போல தமிழ் மொழியில் சகலபீட மாணவர்கட்கும் விரிவுரைநடைபெற்றால் தமிழ் மாணவர்கள் பயனடைவர் என்றும் தெரிவித்தார். (உ)

## தொழிற்சங்க...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாலை 5 மணிக்கு யாழ். முற்றவெளி மைதானத்தில் கூட்டம் திரு. கே.ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச் சேர்ந்த சாந்தி அபயசேகரா, கே. செந்தில்வேல் உட்பட இலங்கை ஆசிரியர் சங்கம், அரசாங்க பொதுச் சேவை தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், தொழில் நுட்ப ஊழியர் சம்மேளனம், லங்கா தொழிற் சங்கங்களின் சம்மேளனம், இலங்கை வர்த்தக ஊழியர் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர்.

### சுருட்டுத் தொழிலாளர்

இலங்கை சுருட்டுத்தொழிலாளர் சங்கம் தனது மேதினக்கூட்டத்தை நாவடியில் உள்ள சங்கமண்டபத்தில் நடத்த உள்ளது.

இச்சங்கத்தின் தலைவர் திரு. முதலியார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தொழிலாளரின் கூலி, அவர்களெதிர்நோக்கியுள்ள கஷ்டங்கள் பற்றி ஆராயப்படும்.

### வேண்டுகோள்

சுருட்டுத் தொழிலாளர்கள் சகலரையும் தமிழ் தொழிலாளர் மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர் சங்கத் தலைவர் திரு ஆ. துரைராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## கொழும்பில் —

(1-ம் பக்க தொடர்ச்சி)

சாட்சிகளும் ரகசியமாக சாட்சியமளிக்க விருந்ததால் இப்பொழுதே அவற்றை ஆரம்பிக்கலாம் என சட்டத்தரணி பாரிலட் கூறினார்.

இதன் பின் பத்திரிகை நிருபர்கள் உட்பட சகல பொதுமக்களும் வெளியேற்றப்பட்டு ரகசியமாக சாட்சியங்கள் பதிவாகின.

சப்இன்ஸ்பெக்டர் நாதனால் வவனியாவில் கடத்தப் பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்ட அன்னபூரணத்தின் கணவன் வேலுப்பிள்ளையும் நேற்று வந்திருந்தார்.

திரு புலேந்திரன் திரு. வேலுப்பிள்ளை சிறிலதி (16 வயது) ரகசியமாக சாட்சியமளித்தனர். திரு புலேந்திரன் சுமார் ஒன்றரைமணிநேரம் சாட்சியமளித்தார்.

## துப்பறியும் —

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று தமது பணியை ஆரம்பித்துள்ளனர்.

### துப்பறியும் பொலிசார் நம்பிக்கை

இக்கார் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமக்குக் கிடைத்த தடயங்கள், தகவல்கள் மூலம் விரைவில் கொலைஞர்களைக் கண்டுபிடிக்கமுடியும் எனத் தாம் நம்புவதாக துப்பறியும் பொலிஸ் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ம-இ


விவசாயிகளே!

இதோ வந்துவிட்டது!!

மொறிசிட் E 50

- உங்கள் பயிர் வகைகளைத் தாக்கும் சகல பூச்சி புழுக்களையும் அறவே அழிக்க வல்ல அதிசிறந்த நிகரற்ற கிருமி நாசினி.
- J. L. மொறிசன் சன் அன்ட் ஜோன்ஸ் (இலங்கை) லிமிட்டெட் கொம்பனியால் உங்களுக்கெனப் பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்டது.
- 1000 C. C. அளவுள்ள அலுமினியத் தகரங்களில் அடைக்கப்பெற்று உங்கள் நம்பிக்கைக்குகந்த வியாபாரிகளிடம் விற்பனையாகிறது.
- அதிக பயனளிப்பது, லாபகரமானது மொறிசிட் E 50
- 1000 C. C. கொண்ட கலம் ஒன்றின் விலை ரூபா 90/- மட்டுமே.

குறிப்பு: மொறிசிட் E. 50 என்ற பெயரில் குறைந்த விலையில் போலி மருந்துகள் விற்பனையாவதாக அறிகிறோம். இது குறித்து விவசாயிகள் கவனமாக இருக்க வேண்டுகிறோம்.

சகல விபரங்களுக்கும், ஆலோசனைகளுக்கும்... தொடர்புகொள்ளுங்கள்

கல்கி சன்ஸ்

147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் —— போன்: 7711



வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

வேம்படி மகளிர் கல்லூரி 02 05-78 செவ்வாய்க்கிழமை அன்று ஆரம்பமாகும்.

V. ஆறுமுகம்

அதிபர் 91 80



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி (?) 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram 'Eenaadu' Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka